நூலகம்



வாஷிங்டன் பல்கலைக் கழக நூலகம்



புத்தகப் பணி ஏடு

மார்ச் 1970. மலர் 4. இதழ் 7.



SANKAR CEMENT

தரமான, உறுதியுள்ள, உழைக்கக் கூடிய

மாட்டுத் தொழுவங்கள்

கட்ட

சங்கர் சிமெண்ட்

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட். சென்னை-2 தொழிற்சாலைகள்: சங்கர் நகர். சங்கரி.

Criterion ICT 2223 TM

9 - MAR 1970

நூலகம்

ஆசிரியர் :
குயிலன்

மலர் 4 இதழ் 7

மார்ச் 1970

ஆண்டுச் சந்தா ரூபாய் ஒன்பது

கார்ட்டூன்

கருணை வேண்டும்
தலையங்கம்

டாகுமெண்டேஷன்
டாக்டர்.
எஸ். ஆர். ரங்கநாதன்

தீபம் நா. பார்த்தசாரதி
ஆசிரியர் நூற்றொகை
இந்திரா பெருமாள்

மல்லிகைப் பதிப்பகம்
பி. வி. சுப்பிரமணியன்

அ. திருமலை முத்துசாமி
சந்திப்பு
க. நாராயணன்

மாஸ்தி வெங்கடேச
ஐயங்கார்
மணவை முஸ்தபா

நூல் தலைப்பு:
ஒரு கலை நோக்கு
கலாஸாகரம் ராஜகோபால்

இன்னும் பல

அலுவலகம்:
14, தணிகாசலம் செட்டி ரோடு,
தியாகராயநகர்,
சென்னை-17

தொலைபேசி எண் :
441970

NOOLAGAM
Library & Book Trade Monthly

Published by:
BIBLIOPOLE

14, Thanikachalam Chetty Road,
Madras-17
Annual Subscription Rs. 9.



நூலகர்: "மோட்டார் மெகானிசம்" என்ற இந்த நூலைப் படியுங்கள். வண்டி நின்றுபோன காரணம் தெரியும்



கருணை வேண்டும்

தமிழ்நாடு அரசு, கல்லூரி நூலகர்களுக்கு 1-4-1966 முதலே ரூ. 250-15-400 என்ற அடிப்படைச் சம்பள விகிதம் கொடுக்க உத்திரவிட்டுள்ளது.

தமிழக அரசுக்கு, நூலகர்கள் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கின்றனர்: இது ஓர் இடைக்கால நிவாரணமாகத்தான் அரசு கருதி இருக்கும் என "நூலகம்" நம்புகிறது.

நூலகம், தனது 1969, ஜுலை மாதத் தலையங்கத்தில் கல்லூரி நூலகர்களின் சம்பளப் பிரச்னைபற்றி மிக விபரமாக எடுத்துக் கூறியிருந்தது.

நூலகர்கள் எம். ஏ./எம். எஸ்ஸி/எம்.காம் பட்டம் பெற்று, பி.லிப்.எஸ்ஸி.யும் படித்திருக்க வேண்டுமாம். இத்தகைய தகுதியிருந்தாலும், அவர்கள் இரண்டுக்கும் மேற்பட்ட பட்டமேற்படிப்பு துறைகள் உள்ள கல்லூரிகளில் பணியாற்ற வேண்டுமாம். அப்போது தான் ரூ. 300-25-600 என்ற சம்பள விகிதம் உண்டு.

தமிழ்நாடு, சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்த கலை விஞ்ஞான கல்லூரிகள், 1970 ஜனவரி கணக்குப்படி 90 உள்ளன.

அரசு புதிய உத்தரவுப்படி ரூ. 300-25-600 சம்பளம் இருவரே பெறுவர். 88 நூலகர்களுக்கு U.G.C.யின் பலன் கிட்டவில்லை.

மதுரைப் பல்கலைக் கழக கல்லூரிகளிலும் இதே நிலைதான்.

ஆகவே U. G. C யின் பலன் உண்மையில் நூலகருக்கு முழுவதுமாகக் கிடைக்கவில்லை.

தமிழ்நாடு அரசு மீண்டும் பரிசீலனை செய்து, கல்லூரி நூலகர்கள் அனைவருக்கும், அவர்கள் எந்தக் கல்லூரியில் பணி புரிந்தாலும் ஒரு பட்டம் பெற்று, நூலக இயல் D L S or B.L.S பட்டமும் பெற்றிருந்தால் ரூ 300-25-600 என்ற சம்பள விகிதமே வழங்க வேண்டும். அப்போதுதான் U. G. C யின் பரிந்துரையின் பலன் கிடைக்கும். நூலகர்களும் முழுத் திருப்தி பெறுவார்கள். தமிழ்நாடு அரசு நூலகர்கள்பால் உடனடியாகக் கருணை காட்டவேண்டும்.

சென்னை புத்தகாலய பிரசார சங்கம்

ஈ கி ள்

சென்னை புத்தகாலய பிரசார சங்கத்தின் (Madras Library Association) 39வது வருடாந்திரப் பொதுக்குழுக் கூட்டம் 1970ம் ஆண்டு ஜனவரி 6ம் தேதி நடைபெற்றது.

இந்திய தேசிய நூலகவியல் ஆராய்ச்சிப்பேராசிரியர் டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் கௌரவத் தலைவராகத் தொடர்ந்து சங்க வளர்ச்சிக்கு பாடுபட இருக்கிறார்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. பி. எஸ். கைலாசம் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கல்வி நிறுவன நூலகங்களின்சார்பில், திரு. பா. பெருமாள் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொது நூலகங்கள் சார்பில், திரு. பி. கோவிந்தராஜ் செயலாளராகத் தேர்வு பெற்றார்.

நூலகக் கல்வி போதனைப்பிரிவு சார்பில் திரு. பி. கங்காதர ராவ் செயலாளர் ஆனார்.

துறைக்கு ஒருசெயலாளராகத் தேர்ந்தெடுத்த முறையை அனைவரும் பாராட்டினர். நல்வாழ்த்துக்களை நல்கி, சிறப்பான தொண்டு புரிய மூவரும் இணைந்து பாடுபட வேண்டுமென வேண்டுகோள் விடப்பட்டது.

திரு பஷீர்அகமது சையத், திரு கே. சந்திரசேகரன், டாக்டர் டி. பி. கிருஷ்ணராவ், திரு. ஆர். ஜனார்த்தனம் நாயுடு, திரு எஸ். நடராசன், திரு கே. எம். சிவராமன், திரு வி. சுப்பையா பிள்ளை ஆகியோர் உபதலைவர்களாக ஆனார்கள்.

15 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் அமைக்கப்பட்டது.

இந்நூலகச் சங்கத்தின் 42 ஆண்டுகளின் நீண்ட பயன்மிக்க வரலாறு முடிந்துவிடாது, இனி தொடர்ந்து சிறப்பான பணிகளை எதிர்பார்க்கலாம் என்ற நம்பிக்கை ஒளி பிறந்துள்ளது.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

14-2-70ல் செயலாளர்கள், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கூடி, நவம்பரில் வரும் தேசிய நூலகவாரத்தை மிகச்சிறப்பாகக் கொண்டாட திட்டமிடப்பட்டது. புத்தகக் காட்சி, மலர், பேச்சுகள் இடம் பெற இருக்கின்றன.

28-2-70ல் நூலக சங்க VSIS முதல் நிகழ்ச்சியாக நூலக கட்டிடத்தில் அவர்கள் உதவியுடன் 50 நிமிடங்கள் ஓடக்கூடிய "Impressionable Years, Apollo 12" ஆகிய சினிமாப் படங்கள் திரையிடப்பட்டது. இத்துறை செயலாளர் பா. பெருமாள் நன்றிகூற நிகழ்ச்சி இனிது முடிந்தது.

டாகுமெண்டேஷன்

டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன்
தமிழில்: பார்த்தசாரதி பெருமாள்

DRTC கருத்தரங்கு
பிரிவுபசாரப் பேருரை

காலம் மாறிப்போச்சு

ஒரு வாரம் முழுவதும் இந்த (பெங்களூர் DRTC) கருத்தரங்கில் முழுமையாகவும் கடுமையாகவும் பங்குபெற்று, மாநாடு வெற்றி பெற உழைத்தவர்களைப் பாராட்டுகிறேன். மனம் மகிழ்கிறேன்.

மகா சபைக் கூட்டத்தில், ஆராய எடுத்துக் கொண்ட பொருள் பற்றி, பக்தி சிரத்தையுடனும், பிரேமையுடனும் விவாதித்து, நல்ல பயன்மிக்க முடிவுகளைக் கண்டதற்காகப் போற்றுகிறேன்.

மகாசபை இப்போது நடைமுறையில் உள்ள உத்திகளை ஆமோதித்துள்ளது. இதில் கலந்துகொண்டோர் அனுபவமிக்கவர்கள் என்பதையே இம்முடிவு உணர்த்துகிறது.

பழக்கத்திலிருக்கும் நூலக நடைமுறைகளை, ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து மறு பரிசீலனை செய்வது அவசியம். இதை மறுக்கவோ, மறைக்கவோ, மறக்கவோ கூடாது.

காலம் மாறிவிட்டது. கருத்துக்களும் மிக வேகமாக மாறிவருகின்றன. உலகம் தீவிரமாகவும் மின்னல் வேகத்திலும் வளர்ந்து,

மாற்றமடைந்து வருகிறது. ஆராய்ச்சிகள் பலமடங்கு பெருகி விட்டன. அவற்றின் அவசியம் உணரப்பட்டுவிட்டது. ஆகவே தான் நூலகத் துறையிலும் காலத்துக்கேற்ற மாற்றங்கள் தேவை என்கிறேன். நூலக நடைமுறைகளை, உத்திகளைத் தொடர்ந்து அடிக்கடி மறு பரிசீலனை செய்து கொண்டே இருப்பது அவசியமாகிறது.

யோசனையும், சோதனையும்

புதிய யோசனைகளைப் பயன்படுத்தி, அவற்றைப் பரிசோதித்துப் பார்த்து, முடிவுகளை பலருக்கும் பயன்படத் தெரிவிப்பது மிக அவசியம். ஆக, புதிய புதிய பிரச்னைகள் நாள்தோறும் தோன்றிய வண்ணமுள்ளன. அவற்றை நடைமுறைக்கு ஒத்து வருகின்றனவா என்பதை பரிசோதித்துப் பார்ப்பது மிகமிக அவசியமென யோசனைகள் கூறப்பட்டுள்ளன. இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட குழுக்களும், தனிநபர்களும் புதிய யோசனைகளை நடைமுறையில் சோதித்து, அனுபவத்தின் மூலம் பெற்ற புதிய கருத்துக்களை, ஆண்டு மகாநாடு ஒன்றில் சமர்ப்பித்து, மேலும் விரிவாக அவற்றை ஆராய்வார்கள் எனவும் நம்புகிறேன். இது சம்பந்தமாக DRTC தனது முழு ஒத்துழைப்பையும் கொடுத்து உதவத் தயாராக உள்ளது என்றே உறுதியாக நம்புகிறேன்.

நல்ல சகுனம்

நேரம் நல்ல நேரம். இக்கருத்தரங்கில் பங்கு பெற்றவர்களின் சராசரி வயது குறைவாகவே இருப்பது ஒரு நல்ல அறிகுறி என்றே கூறவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் பங்கு பெறுவோரின் சராசரி வயது குறைந்து கொண்டே போகும் நிலையை, கடந்த ஏழாண்டுகளாகக் கவனித்து வருபவர்கள் உணரமுடியும். மையத்தின் மூலமாய்ச் செல்லுகின்ற மத்திய ஸ்திதியும், மத்தியிலமைந்த வயதும் 35க்கு வந்து விட்டது. இந்தியாவில், நூலகத்துறைக்கு நல்ல எதிர்காலம், ஒளிவிளக்காக பிரகாசிக்க இருப்பதை நல்ல சகுனமாகக் கருதலாம்.

புதிய தலைமுறையினர் புதிய யோசனைகளையும், தீவிர புனராலோசனைகளையும் கிளப்பி விடுவார்கள் என்பதை எதிர்பார்க்கலாம். இது இயற்கையே. கடந்த தலைமுறையினர் அறிவின் முதிர்ச்சியால், அனுபவத்தால் கண்டவைகள் பயன் மிக்கவையாக இருக்கலாம். அறிவு சம்பந்தமான வேலைகளில் கண்டிப்பை வளர்த்துள்ளார்கள். பழமையில் ஊறிப் போனமையால், மரபுகளைக் கைவிட மனமில்லாதவர்கள், இதன் காரணத்தாலேயே தாங்கள் வெற்றி பெறுவதாக நினைக்கின்றனர்; உணர்கின்றனர். இவை அபூர்வ நிகழ்ச்சிகளாகவே இருக்கும். இவற்றையும் கவனமாகக் கருதிப் பார்ப்பது அவசியம். முழுவதையும் புறக்கணிப்பது என்பது முடியாததே. இப்போதெல்லாம், நூலகப் பணி வேலைகளில் இளையவர்கள் உற்சாகமாகப் பணிபுரிவது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

வயது வரம்பு

இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட பிரதிநிதிகளின் வயது பிரிவுகளின் அட்டவணையைக் கீழே காணலாம்.

வயதுவரம்பு	பிரதிநிதிகள் எண்ணிக்கை	சதவிகிதம்
1. 20 — 25	9	9
2. 25 — 30	20	20.9
3. 30 — 35	21	21.9
4. 35 — 40	20	20.9
5. 40 — 45	22	22.9
6. 45 — 50	1	1.03
7. 50 — 55	3	3.06

பிரதிநிதிகளின் வயது பிரிவு பற்றிய அடுத்தடுத்த வரைகோடு (ரேகா படத்தில் மாறுதலைக் காட்டும் கோடு - Frequency Curve) ஒன்றை மேலே குறிப்பிட்ட அட்டவணையைப் பயன்படுத்தி வரை படம் போட்டுப் பார்த்தால், பல செய்திகள் எளிதாக விளங்குவதைக் காணலாம். இவ் வரை படத்தைக் கவனமாக ஆராய்ந்தால் பல உண்மைகள் புலப்படும். நூலகத் தொழில் சரியான பாதையில்தான்போய்க் கொண்டிருக்கிறது என்பதே என் பொதுவான கணிப்பாகும்.

டாகுமெண்டலிஸ்டுகளின் பணிகள்

இக் கருத்தரங்கின் பிரிவுபசாரப் பேச்சை சுருக்கமாகச் சொல்லி முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இக் கருத்தரங்கில் நேரிடையாகக் கலந்துகொள்ள இயலாமைக்கு மன்னித்தருள வேண்டுகிறேன். இளைய நூலகர்களின் சாதனைகளை நேரில் கண்டு இன்புற முடியாமைக்கு மனம் வருந்துகிறேன்.

உடல்தான் வீட்டில் கிடந்தது. உள்ளம் கருத்தரங்கைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. கருத்தரங்குச் செய்திகளை அடிக்கடி அறிந்து மனம் மகிழ்ந்தேன்.

காந்தி யுகம்

நூலகத் தொழிலில் ஈடுபடும் அனைவரும் மனப்பூர்வமாகச் சேவை செய்ய முன்வர வேண்டும். அலட்சியப் போக்கு தலைகாட்டக் கூடாது; இருக்கவும் கூடாது. சமூக அந்தஸ்து மிக்கது இப்பணி. காந்தி யுகத்திற்கு முன்பு நூலகப் பணியை, அதன் முக்கியத்துவத்தை, பயனை மக்கள் அவ்வளவாக உணராது விட்டுவிட்டனர். பொது வாசகர்கள் கூட போதிய அக்கறை காட்டவில்லை. காந்தி யுகம் தோன்றியது. மறுமலர்ச்சி மலர்ந்தது. நாடு சுதந்திரம் பெற்றது. கல்வி வளர்ச்சி கூடியது. இன்று மக்கள் இலவசக் கல்வி பெறுகின்றனர். படிப்போர் தொகை நாளும் கூடி வருகிறது.

புதிய தலைமுறை

புதிய சந்ததியினர் நூலகப் பணியின் பயனை, அதற்குள்ள மதிப்பை உணரத் தலைப்பட்டுள்ளனர். பொது, கல்வி நிறுவன நூலகங்களுக்கு வரும் வாசகர்கள் 'டாகுமெண்டேஷன்' பணி பற்றி உணரத் தலைப்பட்டுவிட்டனர். அரசு இலாக்காக்கள், ஆராய்ச்சிக் கூடங்கள், தொழில் நிறுவனங்கள் இப்பணியின் அவசியத்தை உணர்ந்து விட்டன. சில நிறுவனங்கள் இப்போதுதான், காலம் கடந்து உணருகின்றன.

இந்தியா வளருகிறது

இந்தியா வளரும் நாடு. தொழில் துறையில் மிக வேக மாக முன்னேறி வருகிறது. உலக தொழில்களுடன் போட்டியிட, தொழில் நுட்ப அறிவையும், பொருள்களின் வடிவமைப்புத் திறன் பற்றிய அனுபவத்தையும் தொடர்ந்து வளர்த்து வருவது அவசியம். இத்தகைய வளர்ச்சி இல்லை என்ருல் இந்தியா பின் தங்கிவிடும் ஆபத்தும் உள்ளது.

டாகுமெண்டேஷன்

பருவ ஏடுகளில் தொழில் மற்றும் விஞ்ஞானம் பற்றிய புதிய, புதிய கருத்துக்கள் ஏராள மான அளவில் அன்ருடம் வெளி யாகின்றன. ஆராய்ச்சியாளர் களின் நேரத்தையும், உழைப்பை யும், பணத்தையும் சேமித்து உதவ ஒரு குறிப்பிட்ட தொழி லுக்குத் தேவையான கருத்துக் களை மட்டும் திரட்டித் தருவதே 'டாகுமெண்டேஷன்' பணி என் கிருேம். ஆக நூலகத்தொழில், நூலகர்கள், டாகுமெண்டலிஸ்டு கள் ஆராய்ச்சிப் பணியின் கூட்டாளியாகின்றனர்.

இந்தியாவில் அறிவுத்துறை யில் வரும் பருவ ஏடுகள் அனைத் தையும் ஓர் இடத்தில் வர வழைத்துப் பொருள்வாரியாகக் கட்டுரைகளை, தகவல்களை, புதிய முடிவுகளைத் தொகுத்து, பகுத்து, பட்டியலிட்டு, நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு தேவையானவற்றை அனுப்பி உதவுவதே இப்பணியின் பிரதான நோக்கமாகும். இத் தகைய உதவிப்பணி, ஆராய்ச்சி யாளர்களுக்கு மிகப் பயனுள்ள தாகும். அவர்களுக்குத் 'தேடும்' வேலை குறைகிறது. முன்னேற்றம் காண இதுவே நல்ல வழியாகவும் அமைகிறது.

டாகுமெண்டேஷன் பணி கேட்போருக்கும், என்ன கேட் பார்கள் என உணர்ந்து அதற்கு ஏற்றவாறும் நடைபெற வேண்டி யுள்ளது.

வாசகர்கள், ஆராய்ச்சியாளர் கள் என்ன கேட்பார்கள் என் பதை இரு பிரிவுகளாகக் கருதிப் பார்க்கலாம்.

முதலாவதாக, தேசிய மட்டத் தில் எல்லா ஆராய்ச்சிகளையும் அதன் முன்னேற்றத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, குறிப்பிட்ட பிராந்திய, ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கு, அதன் ஆராய்ச்சி வளர்ச்சிக்குப் பயன்படுவதாக அமைய வேண்டும்.

டாகுமெண்டேஷன்லிஸ்டுகளை, கேட்போருக்கு உடனடியாகக் கால தாமதமின்றி கொடுக்கப் பட வேண்டும். ஆராய்ச்சி யாளர்களுக்குத் தேவைப்படும் அன்ருட சமீப கால கருத்துக் களைத் திரட்டுவது எப்படி?

இதற்கு அகில உலக 'கருத்துத் திரட்டுகள்' பயன்படாது. அதனுல்தான் தேசிய மட்டத் திலும் பிராந்திய உள்ளூர் மட் டத்திலும் டாகுமெண்டேஷன் பணி நடைபெறுவது அவசியம் எனக் கருதுகிறேன். இது நாட் டில் காணும் தொழில், மற்றும் இதர முன்னேற்றங்கள் மேலும் சிறப்பாக, வேகமாக, லாபகர மாக அமைய இப்பணி பயன்பட வேண்டும்.

டாகுமெண்டேஷன் லிஸ்டுகள் தயாரிப்பது அவசியம். ஆனுலும் இது மட்டும் போதாது. ஒரு நிறு வனத்தின் டாகுமெண்டலிஸ்டு, தனது நிறுவன ஆராய்ச்சியாளர் களுடன் நெருங்கிய தொடர்பும், நட்பும் கொள்வது அவசியம்,

அவர் செய்யும் ஆராய்ச்சி பற்றி முழு விபரமும் தெரிந்து, அதற்கேற்ற பயனுள்ள டாகுமெண்டேஷன் பணி புரிவது அவசியம்.

ஆராய்ச்சிக்கு உதவி

ஒரு குறிப்பிட்ட பிரச்சினையுடன் அணுகும் ஆராய்ச்சியாளருக்கு, மும்முனையிலிருந்தும் பயன் ஏற்பட வேண்டும். ஆராய்ச்சியாளர், தொகுக்கப்பட்டடாகுமெண்டேஷன்லிஸ்டு, டாகுமெண்டலிஸ்டு ஆகிய மூன்று பிரிவுகளும் இணைந்து செயல்பட்டால், பயன் உடனடியாகக் காண வழியுண்டு.

ஆராய்ச்சியாளர் கூறும் தேவையை 'Facet Analysis' மூலம் நுணுகி ஆராய்ந்து அதன் பல்வேறு நிலைகளையும், (பட்டை தீட்டப்பட்ட சிறுபக்கம்) உய்த்துணர்ந்து பகுப்புப் பட்டியலை அளித்து உதவ வேண்டும்.

இப்படி பிரச்சனையை அணுகும் வழியை சுலபமாக்கி விட்டால், பட்டியல்களைப் புரட்டும் வேலை எளிதாக அமைந்து விடும். நேரமும் உழைப்பும் மிச்சமாகும். இப்படி வழியை எளிதாக்கித் தந்துவிட்டால், ஆராய்ச்சியாளர் தனக்குத் தேவையானதைதேடும் போது, தான் விரும்பியதை, தேவை என்ன என்பதை, நேரடியாகச் சொல்ல முடியாததை, ''கண்டேன்! கண்டேன்!'' என கூற வைக்க முடியும் சக்தி கொண்டது இப்பணி. இத்தகைய அன்றாடப் பணியை, வாழ்வுப் பணியாகக்கருதி உழைத்துப் பாடுபட்டால் நன்மை பல விளையும்.

என் கதை முடிந்தது

இத்தகைய கருத்தரங்கில், கடந்த ஏழுஆண்டுகளாக கலந்து கொண்டவர்கள் அனைவரும் என்பால் காட்டிய அன்புக்கு நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன். இத்தகைய கருத்தரங்கு இயக்குநராகப் பணி புரிவது இதுவே கடைசி முறையாகும்.

என் கதை முடிந்து விட்டது. இதை இரு காரணங்களுக்காக மேற்கொண்டேன். என் உடல் நலம் இக்கருத்தரங்குகளில் முன்போல் தீவிரமாக உழைத்து ஈடுபட இடம் கொடுக்காதது ஒரு காரணம்.

புதியவர்களுக்கு, இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் மனப்பக்குவம் மற்ற காரணமாகும். இளையவர்கள் இத்தகைய பதவிகளில் தலைமையேற்று நல்ல அனுபவங்களைப் பெறுவது அவசியம் என்ற கருத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவன் நான்.

இனி இளைஞர்கள் முன்னின்று இப்பணிகளைத் தொடருவார்கள். அவர்களுக்கு என் ஆசியும், அறிவுரைகளும் என்றும் உண்டு.

நன்றி. விடை பெறுகிறேன்

இக் கருத்தரங்கோடு மிக நெருங்கிய தொடர்பு இல்லாவிட்டாலும், இச்சந்தர்ப்பத்தில் என் சார்பாகவும், என் மனைவி சார்பாகவும் இங்கிலாந்து, லண்டன் நகரிலிருந்து வந்து, எங்கள் மேல் பரிபூரண அன்பைச் சொரிந்த திரு லாங்ரிட்ஜுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இவ்வாண்டு சாரதா அறக்கட்டளைச் சொற்பொழிவை நிகழ்த்த வந்த விருந்தாளியே திரு லாங்ரிட்ஜ்.

அனைவருக்கும் என் அன்பு வாழ்த்துக்களும், நன்றியும்.

போய்வருகிறேன், விடை தாருங்கள். நன்றி—வணக்கம்.

"தீபம்" நா. பார்த்தசாரதி

இந்திரா பெருமாள்

நா. பார்த்தசாரதி

'நா. பா.' என்றும், 'மணி வண்ணன' என்றும், தமிழ் வாசகர் குழாம் அன்புடன் அழைக்கும் திரு. நா. பார்த்தசாரதி 18-12-1932ல் பிறந்தார். அவருக்கு வளவன், கூடலழகன், இளம் பூரணன், 'பொன்முடி' என்றும் புனைபெயர்கள் உண்டு. ஏராளமான நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், கவிதை இலக்கியவிமர்சனக் கட்டுரைகளுக்கு ஆசிரியரான திரு. நா. பார்த்தசாரதி, அவருக்கே உரிய தூய எளிய நடையினுலும், சீரிய கருத்துக்களினுலும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் மனத்தைக் கவர்ந்திருக்கிறர். அவருடைய நாவல்களில் முக்கியமானவை: 'பாண்டிமாதேவி', 'குறிஞ்சி மலர்', 'மணிபல்லவம்', 'பொன் விலங்கு' 'கோபுர தீபம்', 'பட்டுப்பூச்சி', 'நெற்றிக்கண்', 'கபாட புரம்', 'நெஞ்சக்கனல்', 'சமுதாய வீதி'. இதில் முதல் நான்கு நாவல்களும் 'கல்கி' வாரப் பத்திரிகையில் தொடர் கதையாக வெளிவந்து கணக்கற்ற ரசிகர்களின் பாராட்டைப் பெற்றவை. அவருடைய சிறு கதைத் தொகுதிகளில் முக்கிய

மானவை, 'மூவரை வென்றான்', 'காலத்திற்கு வணக்கம்', 'ராஜ கோபுரம்', 'தகடூர் யாத்திரை', 'மங்கியதோர் நிலவினிலே,' 'நெருப்புக் கனிகள்', 'வேனில் மலர்கள்', 'புதியபாலம்' 'தூங்கும் நினைவுகள்' முதலியவை. கவிதைத் துறையில் பெரும் ஈடுபாடுள்ள திரு. பார்த்தசாரதி 'கவிதைக்கலை' என்று ஒரு புத்தகமும் எழுதியுள்ளார். தொல்காப்பியத்தின் பல்வேறு உரைகளைப்பற்றி நீண்டகால ஆராய்ச்சி செய்துள்ளார். இத்துறையில் அவருடைய மற்ற நூல்களாவன 'சொல்லின் செல்வம்', 'மொழியின் வழியே'.

திரு பார்த்தசாரதி மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 'பண்டிதர்' (பாண்டித் துரைத் தேவர் பரிசுடன்) பட்டமும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் 'வித்துவான்' பட்டமும் பெற்றுள்ளார். 'கல்கி' வாரப் பத்திரிகையில் நான்கு வருடங்கள் முக்கிய பதவி வகித்த திரு பார்த்தசாரதி 1965ம் ஆண்டில் 'தீபம்' இலக்கிய மாத இதழை ஸ்தாபித்தார். ஆறு வருட காலத்திற்குள் 'தீபம்' இந்தியாவிலும் கடல் கடந்த பிரதேசங்களிலும் தமிழ் வாசகப் பெருமக்களின் நன் மதிப்பைப் பெற்றிருக்கிறது. பொதுக் கூட்டங்களிலும், விவாத மேடைகளிலும், பட்டி மன்றங்களிலும், இலக்கியப் பேரவைகளிலும் அவர் நிகழ்த்தும் பேருரைகள் கருத்தாழமும், தெளிவும், வாதத் திறமையும், சொல் நயமும் சிறப்பம்சங்களாகக் கொண்டவை. திரு பார்த்தசாரதி ஏராளமான வாசக எழுத்தாளர்களுக்கு உற்ற நண்பரும் துணைவரும் ஆவார். 'Power' 'பவர்' என்ற இலக்கியக் கலந்துரையாடல் மன்றத்தைத் துவக்கி, தமிழுலகுக்கு நல்ல பணியாற்றி வருகிறார். இதன் ஆண்டு விழா சமீபத்தில் வெகு விமரிசையாக நடந்தது.

மலேசியா, சிங்கப்பூர் முதலிய தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து நல்ல அனுபவம் பெற்றுத் திரும்பியுள்ளார்.

நல்ல தமிழைப் பேசியும், எழுதியும் "தேமதுரத் தமிழோசை, உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்பதே அவர் உயிர்க் கொள்கை.

கவிதை

1 கவிதைக் கலை O31, 1 : g K2

பதிப்பு 2, மார்ச், 1962. 194 பக்கங்கள். ரூ. 4-00 தமிழ்ப் புத்தகாலயம், 576, பைகிராப்ட்.ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை-5. கவிதை எழுதுவதைப் பற்றிய விளக்க நூல்.

2 மணிவண்ணன் கவிதைகள் O31, 1N32xM K9

பதிப்பு 1. ஆகஸ்டு, 1969. 160 பக்கங்கள். ரூ. 8-00. நவபாரதி பிரசுரம், 23/442. சுக்கிரவாரப்பேட்டை, கோயம்புத்தூர்-1 கவிதைகளின் தொகுப்பு.

சிறுகதைத் தொகுப்புகள்

3 இராஜ கோபுரம் O31, 3N32,R J9

பதிப்பு 1. 1959. 224 பக்கங்கள். ரூ. 4-00. மங்கள நூலகம், நுங்கம்பாக்கம், சென்னை-34. தமிழ்நாட்டுச் சரித்திரக் குறு நாவல்கள்.

4 கங்கை இன்னும் வற்றிவிடவில்லை O31, 3N32,G K8

பதிப்பு 1. ஜூலை, 1968. 162 பக்கங்கள். ரூ. 3-00. தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் X-417, 8, சின்ன ரெட்டித் தெரு, எழும்பூர், சென்னை-8. தேசிய ஒருமைப்பாடு முதலிய பிரச்னைகள் பற்றிய சிறுகதைகள்,

5 கண்ணன் கதைகள் O31, 3N32,K K4

பதிப்பு 1. ஜூலை, 1964. 236 பக்கங்கள். ரூ. 4-00. வள்ளுவர் பண்ணை, சென்னை-35. பாகவதத்திலுள்ள கண்ணன் தொடர்பான கதைகளை எளிய முறையில் கூறும் நூல்.

6 காலத்துக்கு வணக்கம் O31, 3N32, KA K3

பதிப்பு 1. நவம்பர், 1960. பதிப்பு 2. நவம்பர், 1963. 162 பக்கங்கள். ரூ. 3-00. வள்ளுவர் பண்ணை, சென்னை-35. சமூகத்தின் பல்வேறு நிலைகள் பற்றிய சிறுகதைகள்.

7 தகடூர் யாத்திரை O31, 3N32, TA K7

பதிப்பு 1. செப்டம்பர், 1959. பதிப்பு 2. செப்படம்பர் 1967, 264 பக்கங்கள். ரூ. 4-00. மங்கள நூலகம், நுங்கம்பாக்கம், சென்னை-34.

8 தூங்கும் நினைவுகள் O31, 3N32, TH K7

பதிப்பு 1. ஜனவரி, 1967. 150 பக்கங்கள். ரூ. 3-00. நாவலர் புத்தக நிலையம். பசுமலை, மதுரை-4. இன்றைய சமூகத்தின் பல்வேறு மையக் கருத்துக்கள் பற்றிய குறுநாவல்கள்.

9 தேவதைகளும் சொற்களும் O31, 3N32, THE K9

பதிப்பு 1. ஜூன், 1969. 160 பக்கங்கள். ரூ. 3-00. நவபாரதி பிரசுரம், 23-447, சுக்கிரவாரப்பேட்டை, கோயம்புத்தூர்-1. இன்றைய சமூகச் சிறுகதைகள்.

10 நெருப்புக் கனிகள் O31, 3N32, NE K3

பதிப்பு 1 ஜூன், 1963. 170 பக்கங்கள். ரூ. 3-00. வள்ளுவர் பண்ணை, சென்னை-35. இன்றைய சமூகச் சிறுகதைகள்.

11 நானூற்றில் நல்ல காட்சிகள் O31, 3N32, NA

மங்கள நூலகம், சென்னை-34. விலை ரூ. 1. கதைகள்

12 புதிய பாலம் O31, 3N32, P K7

பதிப்பு 1. ஜனவரி, 1967. 130 பக்கங்கள். ரூ. 2-00. தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5. சமூகத்தின் ஒரு பகுதியில் காணப்பெறும் அவல நிலையைக்கண்டு மனம் வெதும்பும் ஆசிரியரின் மனவேதனையை இக் கதைகளிலே காணலாம்.

13 மகாத்மாவைத் தேடி O31, 3N32, M K9

பதிப்பு 1. ஆகஸ்டு, 1969. 176 பக்கங்கள். ரூ 3-25 தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5 இந்த காந்தி நூற்றுண்டு விழா ஆண்டில் காந்தியச் சிந்தனைகளைப் பல கோணங்களில் நின்று தூண்டக்கூடிய குறுநாவல்கள் நான்கின் தொகுப்பே இந்நூல்.

"காந்தி மலரஞ்சலி" வெளியீட்டு விழாவில் முதல் பிரதியை திருமதி தயாளுகருணாநிதி திரு. ஹரிஹர சர்மாவிடம் வழங்குகிறார்.

---

14 மங்கியதோர் நிலவினிலே — O31, 3N32, M — K3

பதிப்பு 1. 1963. 176 பக்கங்கள். ரூ 3-00. வள்ளுவர் பண்ணை சென்னை-35. காட்டு வாழ்வு, வேட்டை, கிராமச்சூழல் முதலியவற்றில் உருவான சிறுகதைகள்.

15 மூவரை வென்றான் — O31, 3N32, MO — K2

பதிப்பு 1. ஜனவரி, 1959. பதிப்பு 2. மே, 1962 118 பக்கங்கள். ரூ. 2-00 வள்ளுவர் பண்ணை, சென்னை-35. பண்டைய வீரச் செயல்கள் பற்றிய சிறுகதைகள்.

16 வலம்புரிச் சங்கு — O31, 3N32, V — K9

பதிப்பு 1. நவம்பர் 1959. பதிப்பு 3. நவம்பர், 1969. 176 பக்கங்கள். ரூ. 3-00 தமிழ்ப்புத்தகாலயம், சென்னை-5. சமூகச் சிறுகதைகள்.

17 வேனீல் மலர்கள் — O31, 3N32, V — K1

பதிப்பு 1. நவம்பர், 1961. 188 பக்கங்கள். ரூ. 3-00 வள்ளுவர் பண்ணை சென்னை-35. சமூகச் சிறுகதைகள்.

18 அறத்தின் குரல் O31, 3N32, A K4

பதிப்பு 1. செப்டம்பர், 1964. 504 பக்கங்கள் ரூ 10-00 வள்ளுவர் பண்ணை சென்னை-35. மகா பாரதக் கதையைப் புதுமை கலந்த நாவலைப் போல் விவரிப்பது.

19 ஆத்மாவின் ராகங்கள் O31, 3N32, AA K9

பதிப்பு 1 மார்ச், 1969, 276 பக்கங்கள். ரூ. 6-00. வாசகர்வட்டம் (BOOK-VENTURE) 14, தணிகாசலம் செட்டித் தெரு, தியாக ராய நகர், சென்னை-17. தேசியப் போராட்டத்தைச் சித்தரிக்கும் காந்தி சகாப்த நாவல்.

20 கபாட புரம் O31, 3N32, K K7

பதிப்பு 1. 1967. 206 பக்கங்கள், ரூ 4-00 தமிழ்ப் புத்த காலயம் சென்னை-5. கடல்கோள் நிகழ்ந்த பாண்டியர்களின் பழம் பெரும் நகர் கபாடபுரம் பற்றிய சரித்திர நாவல்.

21 குறிஞ்சி மலர் O31, 3N32, KU K6

பதிப்பு 3. 1966. ரூ. 5-00 தமிழ்ப்புத்தகாலயம் சென்னை-5. சமூக நாவல்.

22 கோபுர தீபம் O31, 3N32, G K3

பதிப்பு 1. பிப்ரவரி, 1959. பதிப்பு 2. பிப்ரவரி, 1963, 340 பக்கங்கள் ரூ. 5-00 வள்ளுவர் பண்ணை சென்னை-35. சமூக நாவல்.

23 சமுதாய வீதி O31, 3N32, S K8

பதிப்பு 1. செப்டம்பர், 1968. 800 பக்கங்கள். ரூ. 5-75 தமிழ்ப்புத்தகாலயம், சென்னை-5. இன்றைய சமூகத்தின் போலித் தனத்தையும் வாழ்வின் குற்றங் குறைகளையும் எடுத்துக் காட்டு வதையே நோக்கமாகக் கொண்டிருப்பினும் எவ்வித விரசமுமின்றி படிப்பதற்கு சுவையாக வளர்ந்து செல்கிறது இந்நாவல்.

24 நெஞ்சக் கனல் O31, 3N32, N K8

பதிப்பு 1. மே, 1968. 224 பக்கங்கள். ரூ. 4-25. தமிழ்ப் புத்த காலயம் சென்னை-5. கடந்த கால் நூற்றுண்டில் நமது நாட்டு அரசி யலில் முற்பட்டுள்ள எத்தனையோ குழப்பங்களுக்கிடையிலும் நம் மக்களின் மனச்சாட்சி முற்றிலும் மறத்துப் போய்விடவில்லை என்ற உண்மையை இந்நாவல் மிகவும் தெளிவாக விளக்குகிறது.

25 நெற்றிக் கண் O31, 3N32, N K6

பதிப்பு 1. டிசம்பர், 1966. 252 பக்கங்கள் ரூ. 5-00. நாவலர் புத்தக நிலையம், பசுமலை, மதுரை-4. ஒரு பத்திரிகையாளனைப்பற்றிய தமிழ்ச் சமூக நாவல்.

26 பட்டுப் பூச்சி O31, 3N32, P K4

பதிப்பு 2. 1964. 152 பக்கங்கள். ரூ. 4-00, வள்ளுவர்பண்ணை, சென்னை-35. —நாவல்.

27 பாண்டிமாதேவி O31, 3N32, P K0

பதிப்பு 1. செப்டம்பர், 1960. 562 பக்கங்கள். ரூ. 12-00 மங்கள நூலகம், சென்னை-34. வரலாற்றுப் பெருங்கதை.



" காந்தி மலரஞ்சலி " வெளியீட்டு விழாவில் ம. பொ. சி. பேசுகிறார். தயாளு கருணாநிதி, முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

28 பிறந்த மண் O31, 3N32, PI K4

பதிப்பு 1. செப்டம்பர், 1960. பதிப்பு 2. பிப்ரவரி, 1964 260 பக்கங்கள். ரூ. 5-00. வள்ளுவர் பண்ணை சென்னை-35. விவசாயத் துறையில் ஊக்கமுள்ள கதாநாயகன் மையமாக நிகழும் நாவல்.

29 பொன் விலங்கு O31, 3N32, PO K9

பதிப்பு 2. 1969. 668 பக்கங்கள். ரூ 10-00. தமிழ்ப்புத்தகாலயம், சென்னை-5. சமூக நாவல்.

30 மலைச் சிகரம் O31, 3N32, M K4

பதிப்பு 1. 1960. பதிப்பு 2. 1964. 96 பக்கங்கள். ரூ 1-50. வள்ளுவர் பண்ணை, சென்னை-35. சமூக நாவல்.

31 மணிபல்லவம் O31, 3N32, MA K5

பதிப்பு 1, ஜனவரி, 1963. பதிப்பு 2 ஏப்ரல், 1965. 742 பக்கங்கள்: ரூ 15-00 வள்ளுவர் பண்ணை சென்னை-35. சோழப் பேரரசின் தலைநகர் பூம்புகார் நகர் பற்றிய சரித்திர நாவல்.

32 மனக்கண் O31, 3N32, MAN K5

பதிப்பு 1. அக்டோபர், 1965. 172 பக்கங்கள். ரூ 3-00. தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட், X 417, 8, சின்னரெட்டித் தெரு, எழும்பூர், சென்னை-8. குறுநாவல்களின் தொகுப்பு.

33 வஞ்சிமா நகரம் O31, 3N32. V K8

பதிப்பு 1. பிப்ரவரி, 1968. 154 பக்கங்கள் ரூ 3-00. தமிழ்ப் புத்தகாலயம், சென்னை–5. 'கடல் பிறக்கோட்டிய' சேரர் பெருமான் செங்குட்டுவனின் காலச் சூழ்நிலையை விளக்குகிறது இந்த வஞ்சிமா நகரம்.

34 வெற்றி முழக்கம் O31, 3N32, VE K4

பதிப்பு 1. ஜனவரி, 1962. பதிப்பு 2. பிப்ரவரி, 1964. 406 பக்கங்கள். ரூ. 10-00. வள்ளுவர் பண்ணை சென்னை-35. கொங்குவேள் மாக்கதையைப் புதிய நடையில் விவரிக்கும் வரலாற்று நாவல்.

உரை நடை

35 புதிய பார்வை O31, 6N32, p K9

பதிப்பு 1. ஆகஸ்டு, 1969. 160 பக்கங்கள் ரூ. 3–00. நவபாரதி பிரசுரம், 23–442, சுக்ரவாரப்பேட்டை, கோயம்புத்தூர்-1. சிந்தனைக் கட்டுரைகள்.

36 கடற்கரை நினைவுகள் O31, 6N32, K LO

(அச்சில்) விரைவில் வெளிவருகிறது, நவபாரதி பிரசுரம், கோயம்புத்தூர்-1. பல்வேறு சிந்தனைக் கட்டுரைகள்.

37 சிந்தனை மேடை O31, 6N32, C LO

அச்சில். விரைவில் வெளிவருகிறது. நவபாரதி பிரசுரம், கோயம்புத்தூர்–1. பல்வேறு சிந்தனைக் கட்டுரைகள்.

மொழி ஆராய்ச்சி

38 சொல்லின் செல்வம் P31, J K1

பதிப்பு 1. நவம்பர், 1961. 270 பக்கங்கள் ரூ. 5-00. வள்ளுவர் பண்ணை சென்னை-35. தொல்காப்பியச் சொல்லதிகார உரை ஒப்பு நோக்கு ஆராய்ச்சி.

39 மொழியின் வழியே P31, J K1

பதிப்பு 1. ஆகஸ்டு 1961. 164 பக்கங்கள், ரூ. 2-50 வள்ளுவர் பண்ணை சென்னை-35. மொழி ஆராய்ச்சிக் கட்டுரைகள்.

விலாசம்:

நா. பார்த்தசாரதி,
6, நல்லதம்பி செட்டி தெரு, சென்னை-2.

அடுத்த இதழில்!

அட்டைப்பட விளக்கம்

வாஷிங்டன் பல்கலைக்கழக நூலகம்

பிரபல ஆசிரியர் அகிலன் சந்திப்பு

மல்லிகைப் பதிப்பகம்

பி. வி. சுப்பிரமணியன்

எஸ். சங்கரன்

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் நான் நண்பர் சங்கரனைச் சந்திக்கச் சென்றிருந்தேன். அப்போது நான் வெளியூரில் இருந்து வந்தேன்; சங்கரன் சென்னையில் அச்சகமொன்றை நடத்தி வந்தார். என்னிடம் சற்றுநேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு, ''உங்களுக்கு கார்க்கி என்றால் மிகவும் விருப்பம் அல்லவா? அவர் கதைகள் எல்லாம் இப்போது ஒரே புத்தகமாகத் தமிழில் வந்திருக்கிறது'' என்று கூறி, முழு காலிக்கோவில் பைண்டு செய்யப்பட்டிருந்த அப்புத்தகத்தைக் கொடுத்தார். அதைப் பிரித்துப் பார்த்ததும், 'பி.வி. எஸ். அவர்களுக்கு அன்பளிப்பு' என்று எழுதப்பட்டிருந்தது. 'ரவிப் பிரசுரம்' அந்த நூலை வெளியிட்டிருந்தது.

"இந்த ரவிப் பிரசுரம் என்பது யார்?''

'நான்தான். இது வரை மூன்று நான்கு புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறேன்.'

உலக இலக்கியத்தில் ஒப்புயர்வற்று விளங்கும் ஒருவருடைய நூலை, மிகச் சிறந்த முறையில் வெளியிட்டதற்காக நான் பாராட்டிக் கொண்டிருந்த போது நடந்த நிகழ்ச்சியொன்று என்னைத் தூக்கி வாரிப் போட்டது. சங்கரனவர்களைப் பார்க்க ஒருவர் வந்தார். தமிழில் வெளியாகும் எல்லா நூல்களையும் அவர் உற்சாகமாகப் படிப்பவரென்று தெரிந்தது. சற்றுநேரம் 'ரவிப் பிரசுரம்' வெளியிட்டிருந்த மற்றொரு நூலைப் புரட்டிப் பார்த்தார். மிக நன்றாக இருப்பதாகப் பாராட்டிவிட்டு, அதைக் கையிலெடுத்துக் கொண்டு விடை பெற்றுக் கொண்டார்.

அவர் சென்ற சற்று நேரம் பொறுத்து என்னுடைய சந்தேகத்தைத் தெரிவித்துக் கொண்டேன். 'இங்கு வந்தவர் தாம் எடுத்துக் கொண்ட புத்தகத்திற்குப் பணம் கொடுக்க மறந்துவிட்டார் போலிருக்கிறது' என்று கூறினேன்.

'மறக்கவில்லை' என்று பதிலளித்து விட்டு சங்கரன் சிரித்தார். 'தமிழ் புத்தகங்களை பணம் கொடுத்து வாங்கிப் படிக்கும் வழக்கம் இன்னும் வரவில்லை. போகட்டும், எப்படியாவது படித்தால் போதும்".

இப்படிச் சொல்லி இரண்டொரு ஆண்டுகள் கழிந்தபிறகு வடநாட்டிலிருந்த எனக்கு அவர் கடிதமெழுதியிருந்தார். புத்தக வெளியீட்டை நிறுத்திவிட்டதாக அவர் எழுதியிருந்ததைப் படித்தபோது எனக்கு வருத்தமாக இருந்தது. ஆயினும் ஆச்சரியமேற்படவில்லை. பக்தர்களுக்குப் பெருமாள் கோயிலில் பிரசாதம் கொடுப்பதற்கும், வாசகர்களுக்குப் பிரசுராலயத்தினர் புத்தகங்கள் இலவச விநியோகம் செய்வதற்கும் உள்ள வேறுபாட்டில் நம்பிக்கையில்லாத ஒரு சோஷலிஸ்ட் இதைத் தவிரவேறு என்ன செய்வார்!

சங்கரன் தஞ்சை ஜில்லா களத்தூரில் 1926ல் பிறந்தவர். அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த போது அங்கு ஏற்பட்ட குழப்பங்களினால் கல்லூரிக் கல்விக்கு ஒரு முழுக்கு போட்டு விட்டு அங்கிருந்து கிளம்பினார். பிறகு பத்திரிகைகளில் உத்தியோகம், முழுநேர அரசியல் பணி. ஏறக்குறைய அந்தக் காலத்தில் சென்னையில் அச்சகமொன்றையும் வாங்கி நடத்தினார். ரவிப் பிரசுரம் 1951ல் துவக்கப்பட்டது. சுமார் 10 அல்லது 12 நூல்கள் வெளியிட்டபிறகு அது நிறுத்தப்பட்டது. ஆயினும் இலக்கியத் தொண்டைக் கைவிடவில்லை. அவர் எழுதிய புத்தகங்களை வேறு பதிப்பகத்தினர் வெளியிட்டு வந்தனர். 'சங்கர் பிரிண்டர்ஸ்' என்ற தமது அச்சகத்தையும் அப்போது விற்று விட்டதால் எழுத்துத் தொழிலையே நம்பி வாழ்க்கை நடத்தவேண்டியதாயிற்று. சொந்தமாகவும் மொழிபெயர்ப்புகளாகவும் திரு. சங்கரனுடைய நூல்கள் இது வரை 115 வெளிவந்துள்ளன. மாக்ஸிம்கார்க்கி, டால்ஸ்டாய், கென்னடி, லோகியா போன்ற மேதைகளின் நூல்கள் பல இவரால் தமிழ் வடிவம் பெற்றுள்ளன. தமிழ் நாட்டில் அர

சியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பேற்படுத்திய 'அலைஓசை' என்ற பத்திரிகையை ஓராண்டு காலம் நடத்திய பெருமையும் இவருக்கு உண்டு. யுனெஸ்கோ கூரியர் என்ற அறிவுக் கருவூலத்தின் தமிழ் பதிப்பை நிர்வகிக்கும் பொறுப்பை ஒன்றரையாண்டு காலம் ஏற்றிருந்தார். எழுத்தாளரே பதிப்பாளராகவும் இருக்கும் இரண்டொரு நிறுவனங்களில் மல்லிகைப் பதிப்பகம் குறிப்பிடத் தக்கது.

எழுத்துத் தொழிலிலுள்ள கஷ்டம் எழுத்தாளர்களுக்குத்தான் நன்ருகத் தெரியும்; அது சரிக்கட்டி வரவில்லை எப்படியும், கைவிட்ட புத்தகப் பிரசுர வேலையைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்ற ஆவலை சங்கரன் கைவிடவில்லை. 1962ல் 'மல்லிகைப்பதிப்பகம்' ஆரம்பமாயிற்று.

கடந்த 8 ஆண்டுகளில் மல்லிகைப்பதிப்பகம் 172 புத்தகங்களை வெளியிட்டிருக்கிறது. முதன்முதலில் தியாகராய நகரில் கோட்ஸ் ரோடில் ஒரு இடத்தை வாடகைக்கு வாங்கிக் கொண்டு அங்கு குடியேறி, பிரசுர வேலையை நடத்தி வந்தார். நாலைந்து வருஷங்களுக்கு முன்னரே அது இப்போது நாஞராவ் தெருவில், ராமகிருஷ்ண உயர்நிலைப் பள்ளிக்கு எதிரிலுள்ள சொந்தக் கட்டிடத்துக்கு மாற்றப்பட்டது.

புத்தக விற்பனையில் சங்கரன் முன்போல நண்பர்களுக்கு இலவச விநியோக வேலையை நடத்திக் கொண்டிருக்கிருரோ என்ற பயம் என் உள்ளத்தில் தொடர்ந்து இருந்து வந்தது. ஒரு நாள் இதை நான் வெளியிட்டபோது, 'இல்லை. இல்லை. தொழில் முறையில் இப்போது கருராகவே இருந்து வருகிறேன்' என்ருர் நண்பர். அவருடைய புதல்வன் பெயர் ரவி. அந்தப் பெயரையே தமது முந்திய பிரசுர முயற்சிக்குச் சூட்டியிருந்தார். இப்போது ஆரம்பித்த பதிப்பகத்திற்குப் பெயர் சூட்டியதிலும் அதைப் போன்ற காரணம் ஏதாவது உண்டாவென்று கேட்டபோது, 'இல்லை. 'மல்லிகை' என்பது எனக்குப் பிடித்த பெயராக இருந்தது; அதையே வைத்தேன். இதைத் தவிர வேறு ஒரு காரணமும் இல்லை' என்று பதிலளித்தார்.

மல்லிகைப் பதிப்பகத்தைப் பற்றி நினைக்கும்போது, அதன் உரிமையாளர் கடைப்பிடித்து வரும் இரு கொள்கைகள் குறிப்பிடத்தக்கவையாகத் தோன்றுகின்றன! அவர் வெளியிட்ட 172 நூல்களில், கதை, நாவல், நாடகம் என்ற வகையைச் சேர்ந்தவை 59 தான். மற்றவை எல்லாம் சரித்திரம், வாழ்க்கை வரலாறு, பிரயாண இலக்கியம், நாட்டின் பண்பாடு போன்றவையே. கதை, நாவல்களை மக்கள் அதிகமாகப் படிக்கிருர்கள் என்பது அவருக்குத் தெரியாமலில்லை. ஆனுல் அறிவுத் துறையில் தமிழ்நாட்டு மக்கள் முன்னேறுவதற்கு அவை மட்டும் போதுமா? மக்கள் விரும்புவதைக் கொடுக்க வேண்டும் என்பதுடன், அவர்கள் எதை விரும்ப வேண்டுமென்று வழிகாட்டுவதிலும் பதிப்பகங்கள் உதவிசெய்ய வேண்டுமென்ற காரணத்தினுலேயே அறிவியல் நூல்களை மல்லிகைப் பதிப்பகம் அதிகமாக வெளியிடுகிறது. உதாரணமாக அதன் இரண்டாவது பிரசுரமான "இந்திய நாகரிகம்" என்ற நூல் நாட்டின் பண்பாட்டு வளர்ச்சியை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இதற்கு மதிப்

புரை எழுதிய பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் ''இவ்வளவு சிறிய அளவில் நம் நாட்டு நாகரிகத்தின் சரித்திரத்தை தெளிவாகத் தமிழில் எடுத்துரைத்தவர்களே இல்லை'' என்று கூறியிருக்கிறார்.

இளம் எழுத்தாளருடைய நூல்களுக்கு 'மல்லிகை' முதலிடம் அளிப்பது அதன் தனித் தன்மையில் மற்றொரு அம்சமாக எனக்குத் தோன்றுகிறது. பெயர் பெற்ற எழுத்தாளரின் நூல்களைப் பதிப்பகங்கள் வெளியிட விரும்புவது இயற்கையே. அதிலும் பத்திரிகைகளில் ஏற்கனவே வெளியான தொடர் கதைகளாக இருந்தால் இன்னும் நல்லது. அவற்றிற்குப் போதிய விளம்பரமும் ஏற்கனவே கிடைத்திருக்குமாதலால், அவற்றை வெளியிடுவதன் மூலமாக புத்தக விற்பனையைச் சுலபமாக்கிக் கொள்ளலாம் என்று பதிப்பகங்கள் பொதுவாக நினைக்கின்றன. இதிலுள்ள குறைபாட்டைஎடுத்துக்காட்டும்முறையில் சில ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சியொன்று நினைவுக்கு வருகிறது.

பல பத்திரிகைகளில் நெடுநாட்களாகக் கதை, கட்டுரை, நாடகங்கள் எழுதிப் பெயர் பெற்றிருக்கும் ஒருவருடைய புதல்வர் தமது நூலொன்றை வெளியிடுமாறு பல பதிப்பக உரிமையாளர்களிடம் கேட்டுக் கொண்டார். அதற்கு அவர்கள் தயாராக இல்லை. ''உங்களுடைய தந்தை எழுதிய நூல் இருந்தால் கொடுங்கள், போடுகிறோம்'' என்று அனுப்பி விட்டார்கள். உற்சாகமிழந்த இளைஞர் மல்லிகைப் பதிப்பகத்தில் தமது நூலைக் கொடுத்தார். 'பெயர் பெற்ற எழுத்தாளராக இருந்தாலொழிய பதிப்பகங்கள் நூல்களைப் பிரசுரிப்பதில்லை. அவர்கள் பிரசுரித்தாலொழிய பெயர் பெற முடியாது. இதற்கு என்ன செய்வதென்று புரியவில்லை' என்றார்.

அவர் கொடுத்ததைப் படித்துப் பார்த்த சங்கரன் அது மிக நன்றாக இருந்ததை உணர்ந்தார். அது மல்லிகைப் பிரசுரமாக அடுத்த சில வாரங்களில் வெளியானபோது வாசகர்களின் பாராட்டை அமோகமாகப் பெற்றது.

இளம் எழுத்தாளர்களுக்கு முதலிடம் அளிக்கும் பணியை மல்லிகைப் பதிப்பகம் செய்திராவிட்டால், இவ்வளவு விரைவில் அவருக்குப் புகழும் பெயரும் கிடைத்திருக்குமாஎன்பது சந்தேகம் தான். ந. பிச்சமூர்த்தி போன்ற முதுபெரும் எழுத்தாளருடைய நூல்களை வெளியிட்டு வரும் சங்கரன் இளம் எழுத்தாளருக்கு முக்கிய இடமளித்து, உற்சாக மூட்டுவது மிகவும் பாராட்டத் தக்கது. குயிலி, செல்வராஜ், எஸ். பெருமாள் போன்ற இளம் எழுத்தாளரின் முதலாவது நூல் மல்லிகைப் பதிப்பகத்தினாலேயே வெளியிடப் பட்டிருக்கிறது.

இன்றும் மல்லிகைப் பதிப்பகத்திற்குச் சொந்த அச்சகம் இல்லை. புத்தகப் பிரசுரம் ஒரு தொழில் அல்ல; நாடு இன்றுள்ள நிலையில் அது ஒரு பணி, புனிதமான சேவை என்ற கருத்தில் ஊறிப் போன சங்கரன் அவர்களுக்கு இப்போது அச்சகம் சொந்தமாக இல்லை என்பதில் வியக்கத்தக்கது ஒன்றுமில்லை. சங்கரனுடைய ''மல்லிகை'' வாடாமல்லிகையாக இருந்து தமிழுக்குப் பணிபுரியவேண்டுமென்பதே மக்களின் பிரார்த்தனை.

டாக்டர் மாஸ்தி வேங்கடேச ஐயங்கார்

மணவை முஸ்தபா

கன்னட இலக்கிய உலகின் இணையற்ற ஆஸ்தியாக விளங்கும் டாக்டர் மாஸ்தி வேங்கடேச ஐயங்கார் இன்றைய கன்னட சிறுகதைத் துறையின் தந்தையாகப் போற்றப்படுகின்றார். மாஸ்தியின் முன்னோர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை வாசகர்கள் 'மாஸ்தி வேங்கடேச ஐயங்கார்' என்ற பெயரைக் கொண்டே ஊகித்தறிந்து கொள்ளலாம்.

கன்னடப் புத்திலக்கிய மறுமலர்ச்சியுலகின் முன்னோடிகளில் மிக முக்கியமானவராகக் கருதப்படும் மாஸ்தி வேங்கடேச ஐயங்கார் 'சீனிவாசா' என்ற புனைப் பெயராலேயே கன்னட மக்களிடையே பெரும் புகழ் பெற்றுள்ளார்.

இவர் கவிதை, புதினம், நாடகம், திறனாய்வுக்கட்டுரைகள் முதலியவற்றை எழுதியிருப்பினும் அவரது சிறுகதைகளே அவரது பெரும்புகழுக்குக் காரணமாக அமைந்துள்ளன.

கன்னட இலக்கிய உலகில் சிறுகதைத் துறை காலூன்றிய காலத்தில் அத்துறையைச் செழிப்பாக வளர்த்தவர்களில் கேரூர் வாசுதேவாச்சார், பஞ்சே மங்கேஷ்ராவ் போன்றவர்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இவர்களின் அடிச்சுவட்டிலேயே சிறுகதைப் படைப்புக்களை உருவாக்க முனைந்த மாஸ்தி விரைவிலேயே புதிய புதிய உத்திகளைக் கையாண்டு சிறுகதைத் துறையை சக்தி மிக்க இலக்கியக் கலையாக வளர்த்து விட்டார். கன்னட மக்களின் பண்பாட்டையும் வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவுகளையும் கூட ஆடியிற் காணும் உருவம் போன்று சுவையாகப் படம் பிடித்துக் காட்டுவது இவருக்கு நன்கு கைவரப்பெற்ற இலக்கியத் திறமையாகும். இலக்

கிய மெருகோடுவிளங்கும் இவரது சிறுகதைகள் ஒவ்வொன்றுமே ஒரு சிறிய காவியம் என்று கூற லாம்.

அரை நூற்றுண்டுக்கு முன்பு இவரால் எழுதப்பட்ட 'ரங்கன மதுவே' (ரங்கனின் திருமணம்) என்ற சிறுகதையே இவரது முதல் படைப்பாகும். அன்றிலிருந்து இன்றுவரை இவர் உருவாக்கிய நூற்றுக்கணக்கான சிறுகதைப் படைப்புக்கள் பதின்மூன்று தொகுதிகளாக வெளிவந் துள்ளன. உணர்ச்சியை, சூழ் நிலையை, மனநிலையை, குணச் சித்திர பாவத்தை, வாழ்வின் உயி ரோட்டமான உண்மைகளை அடித் தளமாகக் கொண்டு பின்னப் பட்ட இச்சிறு கதைகளில் 'ஹேம கூட திந்த ஹிந்திருகித மேலெ' (ஹேம கூடத்திலிருந்து வந்த பின்னர்), 'கௌதமி கேளிகத' (கௌதமி சொன்ன கதை), 'மொசரின மங்கம்மா' (தயிர்க் காரி மங்கம்மா) முதலியன அமரத்துவப்படைப்புக்களாகும். மொசரின மங்கம்மா' போன்ற நாட்டுப்புற மக்களின் வாழ்க் கையை — உணர்ச்சிகளைத் தோலுரித்துக் காட்டும் மாஸ்தி 'சரி புத்திரரின் அந்திம காலம்' போன்ற தத்துவார்த்தக் கதை களையும் 'மசுமதி' போன்ற தேச பக்தக் கதைகளையும் 'நிஜகல் ராணி' போன்ற வரலாற்றுப் பின்னணிகொண்ட கதைகளையும் படைத்துள்ளார்.

ஆழ்ந்த உண்மைகளையெல்லாம் அனுயாசமாக சிந்தனைத் தெளி வோடு புலப்படுத்தும் இவரது சிறுகதைகளில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்த மூதறிஞர்ராஜாஜி மாஸ்தியின் சிறுகதைகளில் சில வற்றைத்தமிழில் மொழிபெயர்த் துள்ளார். மாஸ்தியே தமது சிறு கதைகளில் பலவற்றை ஆங்கிலத் தில் மொழி பெயர்த்து வெளியிட் டுள்ளார்.

சிறுகதைத் துறையைப் போன்றே கவிதை இலக்கியத் துறையிலும் நிறைபுகழ் எய்திய வர் மாஸ்தி. தூயகன்னடச்சொற் களைக் கையாண்டு கவிதை புனை வதில் தனி ஆர்வமும் ஆற்றலும் வாய்க்கப் பெற்றவர். உள்ளத்து உணர்ச்சிகளை உணர்வோவிய மாகத் தீட்ட எளிய சொற் களையே பெரிதும் கையாண்டு கவிதைஇயற்றுகிறுர். மொழியும் நடையும் மிக எளிதாக இருப் பினும் கவிதையின் கருப்பொருள் கள் நுட்பமும்ஆழமும் உடையன வாகவே அமைந்துள்ளன.

இவ்வுண்மை உணராத ஒரு சிலர் இவரதுகவிதைகளை 'கவிதை கள்' எனப் பெயரிட்டு அழைக்க விரும்பாது அவைகளை 'வசன நடைக் கவிதைகள்' என்றே புதுப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

மாஸ்தியின் கவிதைகளில் 'அருணு,' 'பின்ஞஹர' முதலியன தலைசிறந்த படைப்புக்களாகும். இவரது கவிதைகளில் பெரும் பாலானவை பக்தியுணர்வை அடித்தளமாகக் கொண்டவை களாகும். எளிய, நன்கு அறிமுக மான சாதாரண சொற்களையே சக்திமிக்க ஆயுதங்களாகத் தம் கவிதைகளில் பயன்படுத்தி உயர்ந்த தத்துவங்களையெல்லாம் உணர்த்தி விடுகின்றுர்.

கவிதை வடிவிலும் இவை குன்றுது கதை கூறுவதில் சுவர் இணையற்றவராக விளங்குகிறுர். 'கௌடரமல்லி' (கௌடர் குடும் பத்து மல்லி), 'கனகதாசரு' (கனகதாசர்) முதலியன அவற்றுள் தலைசிறந்தனவாகும்.

மாஸ்தியின் நாடகக் காப்பியங்களுள் குறிப்பிடத்தக்கச் சிறப்புடையது 'யசோதரா' எனும் நாடகக்காப்பியமாகும். புத்தரின் அன்புத் துணைவியரான யசோதரா தேவி, புத்தரின் பிரிவால் ஏற்பட்ட மனத் துன்பத்தை அடக்கிக் கொண்டு அவரது வருகைக்காகப் பொறுமையுடன் காத்திருக்கும் தகைமையினை உணர்ச்சி பொங்க விளக்குகிறது இந்நூல். மாஸ்தியின் கவிதா உணர்வுக்கும் திறமைக்கும் தக்க உரை கல்லாக அமைந்துள்ளது இக்காவியம். ஷேக்ஸ்பியர் நாடகங்கள் சிலவற்றையும் இவர் கன்னடத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

இன்றைய கன்னட இலக்கிய உலகின் வரலாற்றுப் புதினப் படைப்பாசிரியர்களில் முதலிடம் வகிப்பவர் மாஸ்தி. தமிழ்நாட்டின் வரலாற்றுப் புதினப் பேராசிரியர் 'கல்கி'யைப் போல கன்னட உலகில், இத்துறையில் பெரும் புகழ் பெற்றவர். இவர் தமது வரலாற்றுப்புதினப்படைப்புக்களில் அக்காலத்திய அரண்மனைகள், சேனைகள், அந்தப்புற வாழ்க்கை, அரசபோகச் சிறப்பு, உப்பரிகை உல்லாசம் ஆகியவற்றைச் சித்தரிப்பதிலேயே பெருங்கவனம் செலுத்தாது, அக்காலப் பொதுமக்களின் வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்து விளக்குவதிலேயே அதிக ஈடுபாடுள்ளவராகத் திகழ்கிறார். 'சென்ன பசவ நாயகா'வும் 'சிக்க வீர ராஜேந்திரா'வும் இவரது வரலாற்றுப் புதின எழுத்தாற்றலுக்குக் கட்டியங் கூறும் படைப்புக்களாகும்.

பெண்களின் மென்மையான உணர்வுகளை திறமையோடு வெளிப்படுத்தும் இவர் பெண்ணுலகின் மீது பரிவு மிகக் கொண்டவராவார். அதே போன்ற பக்திமான்களிடம் இவர் கொண்டிருக்கும் மதிப்பும் ஈடுபாடும் குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல. இவரது அமரத்துவப் படைப்புக்களுள் ஒன்றான 'சுப்பண்ணு'வில் வரும் சுப்பண்ணு, லலிதாம்மா போன்ற பாத்திரங்களை இவர் உருவாக்கியிருக்கும் பாங்கே மேற்கண்ட இவரது திறமைக்கு ஏற்ற எடுத்துக்காட்டு. குடும்பச் சூழலும் மனப்போராட்டங்களும் பின்னிப் பிணையப் பட்டிருக்கும் இப் புதினத்தைப் படிப்போர் 'பெண் குலத்தின் குல விளக்கு லலிதம்மா' என வாய்விட்டுக் கூறுவர் என்பது திண்ணம்.

மாஸ்தி படைப்பாசிரியர் மட்டுமன்று. தலை சிறந்த திறனாய்

புதிய மைக்கிராஸ்கோப்

ஒரு பொருளை அதன் அளவைப் போல் 15 லட்சம் மடங்கு பெரிதாக்கிக் காட்டும் திறன் உள்ள மிக நவீன மைக்கிராஸ்கோப் கருவி ஒன்று பிரிட்டனில் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவிலேயே முதலாவதான இந்த 10 லட்சம் வோல்ட் மைக்கிராஸ்கோப், ஹார்லோ (தெற்கு இங்கிலாந்து)வில் உள்ள ஒரு எலக்ட்ரானிக் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டது. இந்தக் கருவி பிரிட்டிஷ் அணுசக்தி ஆராய்ச்சிக் கேந்திரத்தில் பொருத்தப்படவிருக்கிறது.

" விண்வலே "

மோசமான வானிலேயாலும் பாதிக்கப்படாமல், எந்தவித இடையூறும் இல்லாத தகவல் தொடர்புக்கு உதவும் செயற்கைக்கோள் பிரிட்டனில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

"விண்வலே" எனப்படும் இந்த செயற்கைக்கோள், தகவல் தொடர்புக்கான 'சிக்னல்' களே வாங்கி தன்னுடன் தொடர்புள்ள தரை-நிலேயங்களுக்கு அனுப்புகிறது. இத்துடன் தொடர்பு உள்ள 9 தரை நிலேயங்களும் தயார் செய்யப்பட்டுள்ளது.

வாளருமாவார். இவரது திறனுய்வு நூல்களில் மிகச்சிறந்தவை 'ஆதி கவி வால்மீகி' என்ற நூலும் 'பாரத தீர்த்த' என்ற பாரதம் பற்றிய நூலுமாகும். இவ்விரண்டு நூல்களின் மூலம் பண்டைய பேரிலக்கியங்களில் தனக்குள்ள ஆழ்ந்த புலமையையும் பெரிய பாத்திரங்களே மட்டுமல்லாது சின்னஞ்சிறு பாத்திரங்களேயும் கூட எந்த அளவுக்கு நுணுகி நுணுகி ஆராய்ந்து அறிந்துள்ளார் என்பதையும் தெளிவாக அறிய முடிகிறது

மாஸ்தி எழுத்தை முழு நேரத் தொழிலாகக் கொண்டவரல்ல. கல்லூரிப் பட்டம் பெற்று அரசாங்க அலுவலில் ஈடுபட்டு உயர்ந்த பதவிவரை வகித்த இவர் இலக்கியஉலகோடு என்றும் இடையருது நெருக்கம் கொண்டிருந்தவர் என்பதை இவரது நீண்ட இலக்கியப்பணி எடுத்தியம்புகிறது.

எழுபத்தைந்துவயதைக்கடந்து நிற்கும் மாஸ்தி அரசாங்க அலுவலினின்றும் ஒய்வு பெற்ற பின்னரும் 'ஜீவன' கன்னடத் திங்களிதழ் ஆசிரியப் பொறுப்புப் போன்றவற்ருல் இலக்கிய உலகோடு தம்மை முழுமையாக ஐக்கியப்படுத்திக் கொண்டுள்ளார்.

கன்னட சாகித்தியப் பரிஷத்தின் துணைத் தலேவராகப் பணியாற்றியுள்ள இவர் அகில இந்திய எழுத்தாளர் சங்க மாநாட்டுத் தலேவராகவும் 1959 ஆம் ஆண்டில் நடந்த தமிழ் எழுத்தாளர் சங்க ஆண்டு மாநாட்டுத் திறப்பாளராகவும் அமைந்து சிறப்புப் பெற்றுள்ளார்.

இவரது இலக்கியப் பெரும்பணியைப் பாராட்டிக் கர்னுடகப் பல்கலேக் கழகம் இவருக்கு 'டாக்டர்' பட்டமளித்துத் தன் நன்றிக் கடனேச் செலுத்திக் கொண்டது.

இவர் கன்னட சிறுகதைத் துறைக்கு ஆற்றியுள்ள பெருந்தொண்டின் பயனுக 1968 ஆம் ஆண்டில் சாகித்திய அக்காதெமி 'சின்ன கதகெலு' (சிறுகதைகள்) 12-13 தொகுப்புகளுக்குப் பரிசளித்துப் பாராட்டியுள்ளது.

கன்னட இலக்கிய உலகின் இணையற்ற பெருவளர்ச்சிக்குப் பெரும்பணியாற்றியுள்ள மாஸ்தி தனக்குப் பின் தன் வழியில் பேராற்றலுடன் இலக்கியத் தொண்டாற்ற இளம் தலேமுறையொன்றையே வளர்த்து வந்துள்ளார் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அ. திருமலை முத்துசுவாமி

க. நாராயணன்

நூலகவியல் பேராசிரியர் திரு. அ. திருமலைமுத்துசுவாமி அவர்களைப் பேட்டிகாணச்சென்றேன். என்னைக் கண்டதும் வழக்கமான புன் முறுவலுடன் வரவேற்றார். "'நூலகம்' எப்படி நடைபெறுகிறது?'' என்று ஆவலுடன் கேட்டார். அவர் நூலகத்தைத் தொடர்ந்து படித்து வருவது எனக்குத் தெரியும். ஆகையால் நானே அவரைத் திருப்பிக் கேள்வி கேட்டேன்? "'நூலகம்' இப்போது எப்படியிருக்கிறது?'' என்று.

''புதிய புதிய பகுதிகள்; புதிய விளக்கங்கள், எழுத்தாளர் சந்திப்பு; பதிப்பாளர் அறிமுகம்; பிறமொழி அறிஞர் வரலாறு; நூலகவியல் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள்! எல்லாமே நன்றாக இருக்கிறது! ஆனால் நான் கேட்டது அதையல்ல; நஷ்டமின்றி நடைபெறுகிறதா என்ற பொருளில்தான் கேட்டேன். காரணம் நூலகவியல், பதிப்பாளர், நூலகம், நூலகர் ஆகிய துறையினருக்கு தமிழில் வெளியாகும் ஒரே பத்திரிகை இது; நீடித்து நடத்த வேண்டும். எந்தக் காரணத்தாலும் பத்திரிகையை நிறுத்திவிடக் கூடாது; இந்த ஆர்வத்தில்தான் கேட்டேன். இது 'நமது' பத்திரிகை. இப்படிச் சொல்வதில் பெருமை கொள்கிறேன்'' என்றார் அவர்.

''பல சந்திப்புகள், அறிமுகங்கள், பேட்டிகள் வரலாறுகளை வாசகர்களுக்குத் தவறாது அளித்து வருகிறோம். இந்த இதழில் உங்களுடைய பேட்டியை வெளியிட வேண்டும். அதற்காகவே வந்தேன்'' என்றேன் நான்.

வியப்புற்ற அவர், ''எனக்குத் தெரிந்ததை ''நூலகம்'' வாசகர்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சிதான்'' என்றார்.

''நூலகர் அறிமுகம்' என்ற முறையில் உங்களைப் பற்றிய சிறு குறிப்பு கொடுங்கள். அதன் பிறகு மற்ற கேள்விகளைக் கேட்கிறேன்'' என்றேன்.

அவர் சொல்ல ஆரம்பித்தார்:

''இளசை எனப்படும் எட்டயபுரச் சிற்றரசின் கவிஞர்களில் ஒருவராகிய கவி இ. சு. முத்துசுவாமி பிள்ளையின் இளையமகன் தமிழ்ப்பெரும் புலவர் திரு. இ. மு. அருணசலம் பிள்ளை எனது தந்தையாவார். எனது பெரிய தந்தையார் தமிழ் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு வரும் 'சந்திரசேகரப் பாவலர்' என்ற தமிழ்ப்பெரும் புலவர் திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளை ஆவார்கள். எனது பிறந்த ஆண்டு 1928. நெல்லை மாவட்டக் கழகப் பள்ளிகளில் பயின்றதன் பின்னர், இடைநிலை வகுப்புப் படிப்பினை நெல்லை இந்துக் கல்லூரியில் முடித்து விட்டு, அதன்பின் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் படித்து தமிழ் எம். ஏ. பட்டம் பெற்று, அடுத்த ஆண்டு பாளையங்கோட்டை தூய சவேரியர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று பி. டி. பட்டம் பெற்று, அதன் பின்னர் ஓராண்டு சென்னைப் பல்கலைக்கழகம் நடத்தி வந்த நூலகவியல் 'டிப்ளமோ' படிப்பும் முடித்தேன். சில ஆண்டுகளுக்கு முன்னர் சென்னைப் பல்கலைக் கழகம் நடத்துகின்ற நூலகவியல் பட்டப்படிப்பிற்குரிய தேர்வினையும் எழுதி பி. லிப். எஸ்சி. பட்டம் பெற்றேன்''

''நூலகவியல் துறையில் தங்களின் அனுபவம் யாது? தமிழ் எம். ஏ. பட்டம் பெற்ற தாங்கள் அத்துறையை விட்டு, இத்துறையினைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் என்ன?''

நான் முதலில் மனமார விரும்பியது தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்ற வேண்டும் என்பது தான். ஆனால் எனது நலனில் அக்கறையுடைய இரு பெரியார்கள் திசையையே மாற்றி விட்டார்கள். ஒருவர் அன்று கல்வித் துறைத் துணை இயக்குநராக இருந்தவரும், இன்று சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக விளங்குபவருமாகிய பெரியார் நெ. து. சுந்தரவடிவேலு ஆவார்கள். மற்றொருவர் எனது பேராசிரியர் அன்பு கணபதி ஆவார்கள். 1952ல் நான் நிலையான தமிழாசிரியர் பதவிக்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்குங் காலம் இவ் விருவரையும் சென்னையில் சந்திக்க வேண்டியது ஏற்பட்டது. இருவரும், ''தமிழ்ப் படித்தவர்கள் ஏனைய துறைகளிலும் பணியாற்ற வேண்டும். அதனால் ஒவ்வொரு துறையிலும் தமிழ் ஆட்சி செய்ய வாய்ப்பு உண்டாகும். நூலகவியல் துறைக்கு நல்ல வருங்காலம் இருக்கும். எனவே துணிந்து இத்துறையை மேற்கொள்ளலாம்'' என்று கூறி வாழ்த்தி அரசாங்கச் சார்பில் நூலகவியல் 'டிப்ளமோ' பயிற்சி பெற வழி வகையும் செய்தார்கள். மேலும் எனது பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனர் அவர்கள் தமிழ்ப் படித்தவர்கள் எல்லாத் துறைகளிலும் பணியாற்ற வேண்டும் என்று அடிக்கடி கூறிவந்தமையும் நான் இத் துறையில் பணியாற்ற விரும்பியதற்கு மற்றொரு காரணமாகும். 'டிப்ளமோ' பயிற்சிக்குப் பின் ஓராண்டு நெல்லையில் நூலக ஆணைக்குழுவின் நூலகராகவும், அடுத்து ஆறாண்டுகள் மதுரைத் தியாகராசர் கல்லூரி நூலகராகவும் பணியாற்றும்

வாய்ப்பைப் பெற்றேன். 1960 முதல் சென்னைப் பல்கலைக் கழக நூலகவியல் துறையில் விரிவுரை யாளராகப் பணியாற்றி வரு கிறேன்.''

''நூலகவியல்' பற்றித்தாங்கள் எழுதிய நூல்கள் யாவை? அந் நூல்களுக்கு எந்த அளவுக்கு வர வேற்பு இருக்கிறது?''

''நூலகவியல்' பற்றி, தமிழில் 9 நூல்களும், ஆங்கிலத்தில் இரு நூல்களும் எழுதியுள்ளேன். அவை வருமாறு: 1. அமெரிக்க நூலகங்கள், 2. கல்லூரி நூலகம், 3. முதற் பொது நூலக இயக்கம், 4. நூலக அமைப்பியல், 5. நூலகஆட்சி, 6. நூலக நாட்டில் நூற்றிருபது நாட்கள், 7. நூலகவியல்-ஓர் அறிமுகம், 8. தமிழ் நாட்டுப் பொது நூலக வளர்ச்சிக்கு மாதிரித் திட்டம், 9. உயர்நிலைப் பள்ளி நூலகம், 10. ABC of Library Science, 11. A Bibliography on Tirukkural.

வேறு துறைகளில் வெளிவரும் நூல்களுக்கு எந்த அளவுக்கு வர வேற்பு இருக்கிறதோ, அதே அள வுக்கு நூலகவியல் துறை பற்றிய இந்த நூல்களுக்கும் வரவேற்பு இருக்கிறது என்பது என் சொந்த அனுபவம்.''

'''நூலகவியல்' துறை பற்றி அல்லாத பிற துறைகளைப் பற்றி யும் நீங்கள் பல நூல்கள் எழுதி யிருப்பதாக அறிகிறேன். அவை யாவை? மேலும் இதுபோன்ற நூல்கள் எழுத தங்களுக்கு விருப் பம் உண்டா?''

''பிறதுறைகளைப் பற்றி நான் எழுதிய நூல்கள் வருமாறு:- மலைவாழ் மக்கள், அறிவியற் சோலை, உலகப் பெருமக்கள், சைவ நன்னெறி, முதலுதவி, விஞ்ஞானத்தின் கதை, இலக் கியத்தில் விலங்குகளும், பறவை களும், மறுமலர்ச்சிக் கவிஞர்கள், தமிழ்நாடும் மொழியும், உரி மைப் போர், பொற்காலம், யாப் பிலக்கணச் சுருக்கம், இலக்கண வழிகாட்டி. அத்துடன் தமிழ் இலக்கணப் பாட நூல்களும் எழுதியுள்ளேன். வாய்ப்பு ஏற் படும்போதெல்லாம் இத்தகைய நூல்கள் எழுத எனக்கு எண்ணம் உண்டு. இதற்கு எத்தடையும் இல்லை.''

'''நூலகர்', ஆசிரியர், எழுத்தா ளர் என்ற முறையில் இன்றைய நூல் வெளியீட்டுத் துறை பற் றித் தங்கள் கருத்தென்ன? எழுத் துத் துறையை மட்டும் தொழி லாகக் கொண்டுள்ள எழுத்தா ளர்கள் நிலைபற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

''உண்மையைக் கூறின், தர மான நல்ல உயரிய நூல்களை

பத்திரிகையாளர் கேந்திரம்

சர்வதேச பத்திரிகையாளர் கேந்திரம் ஒன்று லண்டனில் அமைக்க முடிவு செய்யப் பட்டுள்ளது. 55 லட்சம் பவுன் செலவில் அமையவிருக்கும் இந்தக் கேந்திரம், இன்னும் மூன்று ஆண்டுகளில் கட்டி முடிக் கப்படும். பிறகு பிரிட்டனில் உள்ள சர்வதேச பத்திரிக்கை யாளர்களின் மையகேந்திரமாக இது விளங்கும்.

பிரிட்டிஷ் பத்திரிகை அலுவல கங்கள் மிகுந்துள்ள பிளீட் தெருவின் அருகாமையிலேயே இந்தக் கேந்திரம் அமையும்.

இன்று வெளியிடுவதற்குப் பதிப்பாளர்கள் அஞ்சுகின்றனர். அதற்குக் காரணம் அவற்றை வாங்குவதில் நூலகங்கள் தங்கள் கருத்தினைச் செலுத்தாமையே ஆகும். கழிவு எவ்வளவு கிடைக்கும் என்ற ஒன்றிலேயே பெரும்பாலோர் கண்ணும் கருத்துமாக இருப்பதால், தரமான நல்ல நூல்களைப் பற்றிச் சிந்திக்க அவர்களால் முடிவதில்லை. இதன் காரணமாக ஒருசில வெளியீட்டாளர்கள் மலிவாகச் சில நூல்களைத் தயாரித்து, அதிக விலையும் வைத்து, கழிவினையும் கூட்டிக் கொடுத்து, எவ்வாறேனும் நூலகங்களின் தலைகளில் கட்டி விடுகின்றனர். இதற்கு நாம் மேலும் ஆதரவு தருவோமானால் தரமான நல்ல நூல்கள் வெளிவராமல்போய்விடும். மேலும்ஒருசிலர் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கின்றனர். அதுவும் தவறு. நூல்கள் இல்லாத பல துறைகளைப் பற்றிய நூல்கள் பல தமிழ்மொழியில் அவசியம் வெளியிடப் பெறுதல் வேண்டும். அது இன்றையத் தேவையாகும்.

''விரல் விட்டு எண்ணக் கூடிய ஒருசில எழுத்தாளர்கள்தான் இன்று எழுத்தை மாத்திரம் நம்பி வாழ முடிகிறது. அவர்கள் கூட முதலில் வேறு ஏதாவது தொழிலில் இருந்து கொண்டு எழுதுவதைத் துணைத் தொழிலாகக் கொண்டு, அதன் மூலம் புகழ் எய்தி இன்று அந்நிலையை எட்டியிருக்கிறார்கள். இந்நிலை மாற வேண்டுமெனின் மக்களிடையே படிக்கும் பழக்கம் மிகுதிப்பட வேண்டும். அவ்வாறே மக்கள் மாணவப் பருவத்திலிருந்தே படிக்கும் பழக்கத்தை கைக்கொண்டு அதனை மேலும் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்குரிய வழிவகைகளையெல்லாம் நாம் வகுக்க வேண்டும். அவ்வாறு செய்யின் வெளியிடப் பெறும் நூல்கள் அனைத்திற்கும் வாசகர்கள் இருப்பார்கள். எனவே நூல் வெளியீட்டுத்துறை வளமையுடன் விளங்கும். நூலாசிரியர்களும் வளமுடன் வாழ முடியும்.''

''நூல் வாங்குவதில் பொது நூலகங்கள் இன்று கடைப்பிடிக்கின்ற முறைபற்றித் தங்கள் கருத்தென்ன? இதனை நல்ல முறையில் செய்வதற்குத் தாங்கள் கூறும் வழிவகைகள்என்ன?''

''பொது நூலகங்களில் இன்று ஒரு சிலரது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு நூல்கள் வாங்கப்படுகின்றன. மேலும் முன்னர்க் கூறியவாறு கழிவு ஒன்றினையே கருதி, அதிகக் கழிவினைத் தருகின்ற பதிப்பாளர்களுடைய நூல்களே வாங்கப் பெறுகின்றன. இதனால் தரமான உயரிய, அரிய நூல்கள் நூலகங்களில் இடம் பெறாமல் போய்விடுகின்றன. இதன் காரணமாக தமிழ்நூல் வெளியீட்டாளர்களிடையே மனச்சோர்வு ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுக்க வேண்டிய கடமை முதலில் அரசாங்கத்தைச் சார்ந்தது. பொது நூலகங்களுக்கென நூல் தேர்வுக் கொள்கைகளை (Book selection Policies) அரசாங்கம் உடனடியாக வகுக்க வேண்டும். மேலும் தலைசிறந்த பதிப்பாளர்கள், நூலகர்கள், நூலாசிரியர்கள், நூலக ஆணைக்குழு உறுப்பினர்கள், நூலக வளர்ச்சியில் அக்கறையுடைய வாசகர்கள் ஆகியோரை ஒன்று கூட்டி ஆலோசித்து அரசு இக்கொள்கைகளை வகுக்க வேண்டும். அவ்வப்பொழுது வெளியாகும் நூல்களில் தரமான நூல்களைத் தேர்ந்தெடுத்து, அவைகள் அடங்கிய நூல் விவரத் தொகுதியினை நமது

அரசாங்கம் வெளியிடுவதற்கு ஆவன செய்யவேண்டும். நூல் விவரத் தொகுதி முடியாது போயின் நூற்பட்டியையாவது வெளியிடல் வேண்டும். அத்துடன் அரசாங்கம் வகுக்கின்ற நூல் தேர்வுக் கொள்கைகளுக்கு ஏற்ப நூலக ஆணைக்குழுவினர் நூல்களை வாங்குகின்றனரா என்பதை அரசாங்கம் கண்காணிக்க வேண்டும். இத்தகைய பணிகளை யெல்லாம் திறம்படச் செய்வதற்கு மாநிலப் பொது நூலக இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனிப் பிரிவு இருக்கவேண்டும்.''

''இலக்கியத் துறையில் தாங்கள் ஏதேனும் ஆராய்ச்சி செய்கின்றீர்களா?''

''தமிழில் பரணி நூல்கள் பற்றிய ஆராய்ச்சியினைச் செய்து முடித்து சென்னைப் பல்கலைக் கழகத்தின் ''எம்.லிட்.'' பட்டத்தைப் பெற்றுள்ளேன். தற்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தின் ''டாக்டர்'' பட்டத்திற்கு 'தமிழ் உரை நடை வளர்ச்சி'' என்பது பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறேன். அத்துடன் சிறந்த தமிழ் இலக்கியங்களுக்கு, நூல்களும், பருவ வெளியீட்டுக் கட்டுரைகளும் அடங்கிய நூல் விவரத் தொகுதிகளையும் தயாரித்து வருகிறேன். சங்க இலக்கிய நூல் விவரத் தொகுதி ஒன்று இப்பொழுது முடிவடைந்துள்ளது. அதில் 200 நூல்கள், 300 பருவ வெளியீட்டுக் கட்டுரைகள் ஆகியவற்றுக்குரிய பதிவுகள் அடங்கியுள்ளன! அது தேர்ந்தெடுத்த நூல் விவரத் தொகுதியாகும்.''

''அமெரிக்க அரசாங்க அழைப்பின் பேரில் அங்கு சென்றுவந்த தாங்கள் நமது மக்களுக்கு வழங்கும் சிறப்பான செய்தி யாது?''

இராமநாதபுர மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர் தேர்தல்

இராமநாதபுர மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர் தேர்தல் மதுரையில் உள்ள நூலக ஆணைக் குழுஅலுவலகத்தில் 11-2-1970ம் தேதி புதன்கிழமையன்று நடைபெற்றது. திரு. உ. பில்லப்பன், எம். ஏ. பி. எல்., அவர்கள் 20 ஓட்டுகள் பெற்று தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். போட்டியிட்ட திரு ஆர். எம்.எம் இராமநாதன் அவர்களுக்கு 6 ஓட்டுகள் கிடைத்தன.

''பொதுவாக அமெரிக்கர்கள் காலத்தை வீணாக்காது கடமையே பெரிதெனக் கொண்டு தங்கள் வளர்ச்சிக்காகவும், அத்துடன் தங்களது நாட்டின் புகழுக்காகவும் ஓய்வு ஒழிச்சலின்றி உழைக்கின்றனர். இதன் காரணமாகத்தான் இன்று அமெரிக்க நாடு உலக அரங்கில் தலைமையிடத்தைப் பெற்றுள்ளது. மேலும் பொருளாதாரத்திலும் சிறந்த வளர்ச்சியை அடைந்துள்ளது. எனவே ஒவ்வொரு துறையிலும் காலத்திற்கு ஏற்ப, நாட்டின் வேகமான வளர்ச்சிக்கேற்ப பல புதிய மாற்றங்களை ஏற்படுத்தி நல்ல பலன்களையும் பெறுகின்றனர். இவ்வுண்மையை நாமும் உணர்ந்து உழைப்பே உயர்வெனக் கொண்டு 'நாட்டுணர்வோடு கடமையுணர்வோடு நமது காரியங்களைச் செய்யின் என்றாவது ஒரு நாள் உலக அரங்கில் அவர்களோடு போட்டியிட இயலும்."

"கடந்த 22 ஆண்டுகளாக நூலகத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி பற்றித் தங்கள் கருத்தென்ன?"

1948ஆம் ஆண்டு சென்னைப் பொது நூலகச் சட்டம் இயற்றப் பெற்றது. 1950ஆம் ஆண்டு அது நடைமுறைக்கு வந்தது. அதனால் பொது நூலகத் துறையில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன; பல புதுமைகள் பூத்தன. அரசிற்கு ஆலோசனை கூற மாநில நூலகக் குழு அமைக்கப்பட்டது. நூலக விதிகள் அரசினரால் வகுக்கப்பட்டன. சென்னை நகரத்திற்கும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நூலக ஆணைக் குழு அமைக்கப்பட்டது. பல தலைமை நூலகங்களும், கிளை நூலகங்களும், வழங்கு நூலகங்களும் ஏற்படுத்தப் பட்டன. பொது நூலகங்களின் எண்ணிக்கை பெருகியது. இதனை எவரும் மறுக்க இயலாது. அத்துடன் சென்னை கன்னிமாராப் பொது நூலகம், மாநிலப் பொது நூலகமாக ஆகியது. சுருங்கக் கூறின் பல நூற்றுக் கணக்கான பொது நூலகங்கள் கல்விப் பணியில் ஈடுபட்டு மக்களது அறிவுப் பசியைப் போக்கி வருகின்றன. அவ்வாறே கல்வி நிலையங்களிலும் நூலக வளர்ச்சிக்குரிய வழி வகைகளும் செய்யப்பட்டுவருகின்றன. எனினும், மேலை நாடுகளைப் போன்று இத்துறையில் சிறந்த வெற்றியைப் பெற்றுள்ளோமென்று சொல்வதற்கில்லை. இது சிந்திப்பதற்குரியதாகும்."

"நூலகத்துறை முன்னேற்றத்திற்கென தாங்கள் ஆற்றியுள்ள பணிகள் என்ன?"

"'நூலகவியல்' ஆசிரியராக இருப்பதன் மூலம் ஒருசில நல்ல நூலகர்களை உருவாக்கி நாட்டிற்கு அளிக்க முடிகிறது. ஏனையோரையும் நல்ல நூலக உணர்வு உடையவர்களாக ஆக்க முடிகிறது என்பதிலும் பெருமைப் படுகிறேன். மேலும் அவ்வப்பொழுது பருவ வெளியீடுகளில் எழுதிவரும் கட்டுரைகள்மூலமாகவும் நூலகவியல் பற்றி நூல்கள் எழுதி அவற்றை வெளியிடுவதன் மூலமாகவும், பல இடங்களுக்கும் சென்று நூலகவியல் பற்றி சொற்பொழிவுகள் ஆற்றுவதன் மூலமாகவும் நூலகர், நூலகவியற் கல்வி, நூலகம் ஆகியவற்றின் இன்றியமையாமையினையும் சிறப்பினையும் தமிழ்மக்கள் அறியும் வண்ணம் இத்துறைக்குப் பணிகள் புரிந்து வருகின்றேன். மேலும், புதிதாக நூலகங்களைத் தொடங்குகின்றவர்களுக்கும் பழைய நூலகங்களை நவீனமுறையில் அமைக்கின்றவர்களுக்கும் அவ்வப்பொழுது ஆலோசனைகள் கூறி வருகின்றேன். நூலகர்கள் சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வுகளை ஆசிரியர்களைப் போன்று தனியாகப் படித்து எழுதுவதற்குரிய வாய்ப்பினைப் பெறுவதற்குப் பல பெரியவர்களைக் கண்டு பேசி, அதற்கு உரியதைச் செய்யும்படி செய்ததில் எனக்கு பெரும்பங்கு உண்டு. அவ்வாறே நூலகர்கள் சென்னைப் பல்கலைக் கழகம் நடத்துகின்ற தேர்வுகளை ஏனைய ஆசிரியர்களைப் போன்று கண்காணிப்பதற்குரிய தகுதியினைப் பெறுவதற்கும், கல்லூரி நூலகர்களும் ஏனைய துறைத்தலைவர்களைப் போன்று கல்லூரி ஆலோசனைக் குழுவில் (College Council) உறுப்பினராக இடம் பெறுவதற்கும் பெரும் முயற்சி எடுத்து பல பெரியவர்களின் துணையால் வெற்றியும் பெற முடிந்தது. தியாகராசர் கல்லூரியில் நான் பணியாற்றியபொழுது கல்லூரி ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக விளங்கினேன்.



அமெரிக்காவில் பேராசிரியர் ஜாங்கே, பேராசிரியர் ஸ்ரீ வத்சவா ஆகியோருடன் பேராசிரியர் அ. திருமலை முத்துசுவாமி.

அப்பொழுதுதான், நூலகர்கள் ஆசிரியர்களைப் போன்று பணி செய்து கொண்டே தேர்வு எழுதலாம் என்பதற்கும், தேர்வுக் கண்காணிப்பாளர்களாகப் பணியாற்றுவதற்கு நூலகருக்குத் தகுதி உண்டு என்பதற்கும் சென்னைப் பல்கலைக் கழகம் ஆணைகள் பிறப்பித்தன. மேலும் நூலகராக இருந்துகொண்டு ஆராய்ச்சிப்பட்டத்திற்கு ஆய்வு செய்வதற்குரிய வாய்ப்பினை முதன் முதலாக எனக்கு சென்னைப் பல்கலைக் கழகம் வழங்கியமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். நான் தியாகராசர் கல்லூரியில் பணியாற்றிய பொழுது இவ்வாய்ப்பினைப் பெற்று தமிழ்த்துறைத் தலைவராக அன்று விளங்கியவரும், எனது பேராசிரியருமாகிய டாக்டர். சி. இலக்குவனார் அவர்களது மேற்பார்வையில் எனது ஆராய்ச்சியினைச் செய்து முடித்து ''எம்.லிட்'' பட்டத்தைப் பெற்றேன். இதன் அடிப்படையில் தான் ''டாக்டர்'' பட்டத்திற்குரிய ஆய்வினைச் செய்வதற்குரிய வாய்ப்பினை எனக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் வழங்கியது. என் வழி நின்று ஏனையோரும் வளரவேண்டுமென்பது எனது பெருவிருப்பமாகும். இதற்கெல்லாம் நூலகர்களுடைய வளர்ச்சியிலே ஆர்வமும் அக்கறையும் காட்டி வந்த முன்னைய துணைவேந்தர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களது பரிவுள்ளமே காரணம்.

''தமிழகப் பொது நூலகத் துறையில் வளர்ச்சி யேதுமில்லை

என்று ஒரு சிலர் கருதுகின்றனர். அது சரியா; பொது நூலக வளர்ச்சிக்குத் தாங்கள் ஏதாவது வழிவகைகள் கூற இயலுமா?''

''பொது நூலகத் துறையில் வளர்ச்சி ஏதுமில்லை என்று சொல்வது தவறான கருத்தாகும். வளர்ச்சி இல்லாமலில்லை. இது வரை பொது நூலகங்களின் எண்ணிக்கையை விரிவுபடுத்துவதில் மாத்திரம் நாம் முழுக் கவனத்தையும் செலுத்தி வந்தோம். முன்னர்க்குறிப்பிட்டபடி நூற்றுக் கணக்கான பொது நூலகங்கள் இன்று தமிழகத்தில் பணிசெய்கின்றன. ஆனால் நூலகங்களை அமைப்பதிலும்அவற்றை நடத்துவதிலும் நவீன முறைகளை கடைபிடிக்காமலிருப்பது வருந்துதற்குரியதே. உதாரணமாக நூலகக்கூட்டுறவு (Library Cooperation), நூலக ஒருங்கிணைப்பு (Library Coordination) ஆகிய முறைகள் இன்று நடைமுறையில் இல்லை. அவற்றை நாம் உடனடியாக மேற்கொள்ளுதல் சாலச் சிறந்ததாகும்.

''மேலைநாடுகளைப்போன்று சில ஆண்டுகளுக்கு ஒரு முறை விசாரணைக் குழுக்களை அமைத்து அக்குழுவினர் அறிக்கை யொன்றினைத் தயாரிக்கச் செய்து, அவ்வறிக்கையில் கூறப்படும் ஆலோசனைகளுக்கு ஏற்ப இத்துறை வளர்ச்சிக்கு நாம் ஆவன செய்ய வேண்டும். இன்று அது நடைமுறையில் இல்லை.

''அடுத்து குறிப்பிட வேண்டிய முக்கியமானதொன்று: பொது நூலகங்களின் நிதி நிலைமையில் இன்றுஏற்பட்டுள்ள பற்றுக்குறையாகும். சென்னை நகரம், கோவை மாவட்டம் ஆகிய இரண்டு இடங்களையும் தவிர, ஏனைய இடங்களில் நிதிப்பற்றுக் குறை ஏற்பட்டுள்ளது மறுக்க முடியாத உண்மையாகும். அதன் காரணமாக நூலகத் துறை வளர்ச்சியில் ஒரு மந்த நிலை ஏற்பட்டுள்ளது. சென்னை பொது நூலகச் சட்டம் நூலக வரியாக அனுமதிப்பது ரூபாய்க்கு 3காசுகளாகும். ஆரம்பத்தில் இது போதுமானதே. ஆனால் இன்று நூலகங்கள் பல்கிப் பெருகியுள்ள காரணத்தினால் நிதி பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. இது இயற்கையே. நூலகச் சட்டம் நூலக நிதியினைப் பெருக்குவதற்கு இடம் அளிக்கின்றது. எனவே நூலக வரியினை ஓரளவு உயர்த்துவதில் தவறொன்றுமில்லை. முதல் படியாக இப்பொழுதிருக்கும் நூலக வரியினை இரட்டிப்பாக்கலாம். அவ்வாறு செய்தால் அரசாங்கம் அளிக்க வேண்டிய உதவித் தொகையும் இரட்டிப்பாகும். மேலும் மத்திய அரசினரிடம் பொது நூலக வளர்ச்சிக்குப் போதுமான அளவு நிதி உதவி பெறுவதற்குத் தக்க முயற்சி எடுக்க வேண்டும். அத்துடன் பொது மக்களும் பொது நூலகத் துறையினை வளப்படுத்துவதற்குத் தங்களாலான உதவிகளைச் செய்ய வேண்டும். கையிலிருக்கின்ற பணத்தைக் கொண்டு நூலக ஆணைக்குழுக்கள் அனைத்தும், சொந்தக் கட்டிடங்களைக் கட்டும் எனின் இன்று வாடகைக்காகச் செலவிடப்படும் பணத்தைச் சேமிக்க முடியும். கட்டிடங்களைக் கட்டுங்கால் பொதுமக்களிடமிருந்து இடத்தினையும் சில பொருட்களையும் இலவசமாகப் பெறுவதற்கு இத்துறையிலுள்ளவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். இவற்றிற்கெல்லாம் மேலாக கொடுக்கப்படுகின்ற நிதி ஒழுங்காகச் செலவழிக்கப்படுகின்றதா என்பதைக் கண்காணித்தலும்

நல்லது. இறுதியாக, ஒன்று சொல்ல வேண்டும். இத்துறை நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது என்பது கண் கூடு. ஆனால் பொது நூலகங்களால் மக்களுக்கு ஏற்படுகின்ற பயன்கள் எந்த நிலையில் உள்ளன என்பதைப் பற்றிச் சிந்திக்கையில் ஒரு சில குறைகள் இருப்பதை நாம் உணராமலில்லை. அதற்குரிய முக்கிய காரணம் இத்துறையில் உயர்பதவிகளை வகிக்கின்றவர்கள் நூலகவியல் கல்வி இல்லாமலும், நூலகவியல் பயிற்சி இல்லாமலும் இருப்பதேயாகும். மேலும் அவர்கள் முழுநேர ஊழியர்களாக இல்லாமலிருக்கிறார்கள். உதாரணமாக இன்று மாநிலப் பள்ளிக் கல்வி இயக்குநர் பொது நூலக இயக்குநராக விளங்குகின்றார். மாநிலச் சிறப்பு நூலக அதிகாரி முதியோர் கல்விக்குரிய அலுவலராகவும் உள்ளார். மாவட்டக் கல்வி அலுவலரே நூலக ஆணைக்குழுவின் செயலாளராகஉள்ளார். இப்பதவிகளை அவர்கள் வகிப்பதற்கு எந்தவித ஊதியமும் அவர்களுக்குக் கிடையாது. மேலும் அவர்கள் வேறொரு பொறுப்பான பணியை மேற்கொண்டிருப்பதால் இத்துறைக்கு தங்களுடைய முழுக் கவனத்தையும் செலுத்த இயலாது. எனவே நூலகவியல் கல்வியறிவும், பயிற்சியும், அனுபவமும் உடையவர்களையே இனியாவது இப்பதவிகளில் அமர்த்துதல் வேண்டும். அவ்வாறு நாம் செய்யின் அவர்கள் நூலகங்களை நல்ல முறையில் நிறுவியும், கண்காணித்தும், புதிய தொழில் நுணுக்கங்களைக் கடைபிடித்து அவைகளை வளரச் செய்தும் நல்ல பலன்களை ஏற்படுத்த முடியும். இது தவிர, இத்துறையில் ஏற்கெனவே பணியாற்றுகின்ற நூலகர்களும் ஏனையோரும் பிற துறைகளில் பணியாற்றுகின்றவர்களைப்போன்று ஊதியமும் பிற சலுகைகளும் பெறுவதற்கு உரியவைதையும் நாம் செய்ய வேண்டும்.''

'நூலகவியற் கல்வி வளர்ச்சி பற்றித் தாங்கள் ஏதேனும் கூற விரும்புகின்றீர்களா?'

''கூறுவதற்குநிறையக்கருத்துக்கள் உள்ளன. ஆனால் நான் ஒரு சிலமுக்கியமான கருத்துக்களையே இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். முதலாவதாக, பாடத்திட்டத்தில் ஏட்டறிவினுக்கு இருக்கின்ற செல்வாக்கைக் குறைத்து செய்முறை அறிவினுக்குச் சிறந்த இடத்தை ஒதுக்குதல் வேண்டும். இரண்டாவதாக நூலக வியற் பகுதிக்கென ஒரு தனி நூலகம் இருக்க வேண்டும். மூன்றாவதாக நூலகவியற் கல்வி பயிலும் மாணவர்களுக்கென இரு செய்முறைக் கூடங்கள் (Labs) இருக்கவேண்டும். ஒரு செய்முறைக் கூடம் ஆய்வு உதவுப்பணி இயலுக்கு ஒதுக்கப் பெற வேண்டும். நூலக நூற்பட்டி இயல் செய்முறைக் கூடமாக மற்றொன்று இருத்தல் வேண்டும். இத்துறைத் தொழில் நுணுக்கத் துறையாகும். எனவே நாட்டின் தேவைக்கேற்ப குறிப்பிட்ட ஒரு சிலரைத்தான் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளிக்க வேண்டும். துறையில் அநுபவம் உடையவர்கள் ஆராய்ச்சி செய்வதற்குரிய வழிவகைகளைஉடனடியாக வகுக்கவேண்டும். விதிகளைக் கடுமையாகக் கடைப்பிடியாது உண்மையில் ஆர்வம் உடையவர்களை ஊக்குவிக்க வேண்டும். காலத்திற்கு ஏற்றவாறு பொருளின் வளர்ச்சிக்கு ஏற்ப பாடத் திட்டத்தில் பல மாற்றங்கள் செய்வதில் எவ்விதத் தயக்கமும் நாம் இனிக்காட்டக்கூடாது. இது நூலகவியற் கல்வி வளர்ச்

சிக்குப்பெரிதும் உதவும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.''

''தமிழகப் பொது நூலகத் துறையில் ஈடுபட்டிருக்கும்,—ஈடு படவிருக்கும் இளம் நூலகர் களுக்கு நீங்கள் கூற விரும்பும் செய்தி என்ன?''

''கல்லாமையினை நாட்டிலிருந்து அறவே அகற்றுவதற்கு அயராது அவர்கள் பாடுபடவேண்டும். அதற்கேற்ற வகையில் அவர்கள் நிறைந்த கல்வி உடையவர் களாகவும், பணிசெய்யும் பண் புடையவர்களாகவும், தாங்கள் ஆற்றுகின்ற தொழிலில் நம்பிக் கையும், திறமையும், அத் தொழிலைப் பற்றிய உயர்ந்த எண் ணமும் கொண்டவர்களாகவும் விளங்க வேண்டும். அவ்வாறு அவர்கள் விளங்கி, காலத்தை இகழாது,கருத்துடன்கடமைகளை ஆற்றிவரின் நூலகத் துறை வளரும். அது வளரின் அவர் களுடைய நிலையும் உயரும்.''

பேட்டிமுடிவடைந்தது. நீண்ட பேட்டியாக இருந்தாலும், பல நுணுக்கமான கேள்விகளுக்குக் கிடைத்த பதிலும், பயனுள்ள கருத்துகளும் எனக்கு மன நிறைவை அளித்தது. நான் எழுந்து விடை பெற்றேன்.

அவரும் எழுந்து நின்று, ''நூலகம் நமது பத்திரிகை: அதற்குப்பணியாற்ற எப்போதும் நான் தயார். நாட்டிற்கு அறி வியல் பணியைத் தொடர்ந்து செய்யுங்கள். உங்களுக்கு என் ஒத்துழைப்பு எப்போதும்உண்டு'' என்று கூறி புன்னகையுடன் விடையளித்தார் அடக்கமே உருவான அப்பேராசிரியர்.

★

வரி விளம்பரங்கள்

வசதியாகத் தங்குவதற்கு லாட்ஜ்.

நாகர் கோயில் வரும் பிர யாணிகள் தங்குவதற்கு வசதி யான இடம் ''கைலாஸ் லாட்ஜ்'' பஸ் நிலையம் சமீபம், மீனாட்சி புரம், நாகர் கோயில்-1

Kailas Lodge
Meenakshipuram
Nagercoil – 1
Phone. 239

கல்லூரி, பள்ளி புத்தகங்கள்

உயர்நிலைப்பள்ளி, கல்லூரி நூலகங்களுக்குத் தேவையான ஆங்கிலம், தமிழ்ப் புத்தகங் களுக்கு விண்ணப்பிக்கவும்.

Xcel - Choix
Book Sellers & Publishers
114, Poonamallee High Road
Madras - 29.

வாங்கி விட்டீர்களா ?

ஆலந்தூர் கோ. மோகன ரங்கனின் கவிதைஇலக்கியங்கள். மோகனரங்கன் கவிதைகள் ரூ 2- வைரமூக்குத்தி ரூ 1.50. சித்திரப் பந்தல் ரூ. 2-00. கனவுப்பூக்கள் ரூ 2-00

வசந்தா பதிப்பகம்
605, முத்துக் குமாரசாமிசாலை
ஆலந்தூர், சென்னை-16

வசந்தா பதிப்பகம்

கோமான்

கவிதைத் துறையிலே நடை பெற்று வரும் புதிய முயற்சிகளை, இளைய தலைமுறையினரின் எழுச்சி மிக்க கவிதை இலக்கியங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் எழுந்ததே வசந்தா பதிப்பக மாகும்.

கவிதை நூல்களைப் படிப்பவர்கள் குறைவு. விற்பனையோமிகவும் குறைவு. ஆனால் கவிதைக் கலை ஓர் ஒப்பற்ற ஆற்றல் வாய்ந்த அருமையான கலை என்பதை எவரும் மறுக்கமுடியாது. அதனால் தான் கடந்த ஒன்றரையாண்டிற்குள் மிகவும் துணிவுடன் தொடர்ந்து நான்கு கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்கள்.

மற்ற பதிப்பகங்களுக்கும் இந்தப் பதிப்பகத்திற்கும் ஒரு பெரிய வேறுபாடு உள்ளது. இது வியாபார நோக்கத்தில் நடத்தப் படுவதல்ல; பணத்தைப் பெரிதாகக் கருதியோ, இலாபத்தை எதிர்பார்த்தோ நடத்தப்படுவதும் அல்ல. நல்ல கவிதைகள் தமிழர் இல்லங்களிலும் அவர்தம் உள்ளங்களிலும் ஒலிக்கவேண்டும் என்ற பெருநோக்கம் ஒன்றையே கருதி இப்பதிப்பகம் செயல்படுகிறது.

முதலில் வெளியிட்ட நூல் "மோகனரங்கன் கவிதைகள்". இதன் ஆசிரியர் **ஆலந்தூர் கோ. மோகனரங்கன்**. இது அவர்களின் முதல் வெளியீடாக இருந்ததனால் இதைச் சிறந்த முறையில் வெளியிட்டார்கள். அழகிய மூவண்ண ஓவியத்தை அட்டைப்படமாகத் தாங்கி நூல் சிறப்பாகவும் கவர்ச்சியாகவும் வெளிவந்தது. பத்திரிகைகள் இந்நூலைப் பெரிதும் பாராட்டி வரவேற்றன.

இரண்டாவது வெளியீடாக "வைரமூக்குத்தி" என்ற கவிதை நாடகத்தொகுப்பு நூலை வெளி

எழுத்தறியாமை ஒழிக்கப்பட்டது

ரஷ்ய சோவியத் சோஷலிச சமஷ்டிக் குடியரசு மக்களிடையே எழுத்தறியாமையை ஒழிக்கும் சட்டத்தில் 1919 டிசம்பர் 26ல் லெனின் கையொப்பமிட்டார். 8 வயதுக்கு மேல் 50 வயதுக்குட்பட்ட அனைவரும் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும், என்று இந்தச் சட்டம் கூறிற்று. கலாசாரப்புரட்சியின் போது ஒரு புதிய கல்வி முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

முன்பு 9 முதல் 49 வயது வரைக்கும் உள்ள மக்களில் 28.4 சதவீதத்தினரே எழுதப் படிக்கத் தெரிந்திருந்தனர். 1926ல் இது 56.6 சதவீதமாக உயர்ந்தது. 1937ல் சோவியத் யூனியனில் எழுத்தறியாமை அறவேஒழிக்கப்பட்டு விட்டது.

— சோவியத் செய்தி

யிட்டார்கள். இது வானொலியில் ஒலிபரப்பான கவிதை நாடகங்களைக்கொண்டது. சென்னையில் நடைபெற்ற பாரதிதாசன் விழாவில், தமிழ் எழுத்தாளர் மன்றத் துணைத் தலைவர் திரு. எம். அப்துல் வகாப் அவர்களால் வெளியிடப்பட்டது.

மூன்றாவது வெளியீடாக ''சித்திரப்பந்தல்'' என்றகவிதைத் தொகுப்பை எளிய முறையில் ஆனால் கவர்ச்சியாக வெளியிட்டோம். இது கவிதை வட்டம் துவக்க விழாவில் புலவர் திரு. பொன்னிவளவன் அவர்களால் வெளியிடப்பட்டது. திரைப்படப் பின்னணிப்பாடகர்களும் பாடகிகளும் பாடிய மெல்லிசைப்பாடல்களை ஏராளமாகக் கொண்ட இத் தொகுப்பை இசைப்பாடல் பாடுகிறவர்கள் மிகவும் விரும்பி வரவேற்கிறார்கள்.

நான்காவதாக ''கனவுப் பூக்கள்'' என்ற காவியத்தை வெளியிட்டார்கள். இது அருமையான ஒரு கதையைக் கருவாகக்கொண்டது. சிறந்த கவிதைச் சுவை உடையது.

இதுவரை ஒரே ஆசிரியரின் கவிதை நூல்களையே வெளியிட்டுள்ளார்கள். நல்ல ஆதரவு கிடைக்குமானால் எதிர்காலத்தில் இன்னும் பல கவிஞர்களின் படைப்புகளை வெளியிடவும், இவ்வளரும் பதிப்பகத்திடம் திட்டங்கள் உள்ளன. நல்ல நோக்கங்களுடன் அவை வெளியிடப்படும்.

நூறாண்டுகளுக்கு மேல்

புகழ்பெற்ற அச்சகம்

ஹோ அண்டு கம்பெனி

ஸ்டிங்கர்ஸ் தெரு, சென்னை-1

நூல் தலைப்பு: ஒரு கலைநோக்கு

கலாஸாகரம் ராஜகோபால்

ஒரு நூலின் தலைப்புப் பக்கத்தில் அந்த நூலைப் பற்றிய விவரங்கள் அச்சிடப்படுகின்றன. புத்தகத்தின் உள்ளடக்கத்தை உடனே அறிந்துகொள்ள தலைப்பு விவரங்கள் உதவுகின்றன. தலைப்புப்பக்கம் கவர்ச்சிகரமாக இருக்க வேண்டுமானால் ஒரு ஓவியரால் அதற்கு வடிவமைப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. புத்தகத்தைப் பற்றிய விவரங்களை ஓவியர் கோடுகள் உதவியுடனும் வடிவங்கள் மூலமாகவும் சித்தரிக்கிறார். அவர் புத்தகத்தின் பொருளை கிரகித்துக் கொண்டு தாம் உணர்ந்த விஷயத்தை வாசகர்கள் கவனத்தை ஈர்க்கும் முறையில் ஒரு வடிவமாக அமைக்கிறார். போதிய அளவுக்கு மேலாக அவர் சொற்களைப் பயன்படுத்துவதில்லை. தலைப்புப் பக்கம் கண்ணைக் கவரும் முறையில் அமைப்பதே அவருடைய வேலை. அதன் பின்னர்தான் மனதைக் கவருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. கண்கள் பார்த்தவற்றை அப்படியே ஏற்றுக்கொள்கின்றன. மனம் பொருளை ஆய்ந்தறிய முற்படுகிறது.

கண்ணைக் கவரும் தலைப்புப் பக்கம் அமைப்பவர் வெறும் நுணுக்க நிபுணராயிருந்தால் போதாது. உணர்ச்சிகளுக்கு ஏற்ப வடிவங்களைப் படைக்கும் ஆற்றல் படைத்தவராயிருக்க வேண்டும். வேலைப்பாட்டுத் திறன் உணர்ச்சி வெளியீட்டுக்கு அனுசரணையாகவே இருக்க வேண்டும். இவ்வகையில்தான் தேர்ச்சியில்லாத ஒரு குழந்தையின் ஓவியம் சித்திர நிபுணரின் படைப்பைவிடப் பல விஷயங்களைப் பார்ப்பவர்க்கு எடுத்துச் சொல்லும் தன்மை கொண்டதை சில சமயங்களில் நாம் அறிய முடிகிறது. ஒரு நூலின் பொருளை வாசகர்களுக்கு எடுத்துக் கூறுவதில் ஆசிரியர் பல வித சிந்தனைப் போக்குகளுக்கு உட்பட வேண்டியிருக்கிறது. பல சம்பவங்களைச் சேர்க்க வேண்டியிருக்கிறது. நிகழும் சம்பவங்கள்

கண்களால் பார்த்து அறியக் கூடியவை. இவ்வகையில் தலைப் புப்பக்கத்தில் கண்ணுக்கு உதவும் வடிவத்தை அமைக்க சம்பவங் களின் இயல்பு உதவலாம்.

புத்தகப்பதிப்பாளர் வாசகருக் குப் பிரதிநிதியாக விளங்குகிறார். தலைப்புக்கு வடிவம் கொடுக்கும் ஓவியரைப் போல அவரும் தனி மனிதர்தான். ஓவியமும் வாச கரின் பிரதிநிதி என்ற முறையில் தலைப்பில் நூலின் உண்மைப் பொருளைச் சித்தரிக்கலாம். புத் தகம் முழுவதையும் படித்துப் பொருளை கிரகித்துக் கொள்வ தற்கு ஓவியருக்கு நேரமில்லாமல் போகலாம். இந்த நிலையில் அவர் தலைப்பு வடிவமைப்பு கொடுக்க முயல்வது சரியானது என்று சொல்வதற்கில்லை. பதிப்பாள ருக்கு ஓவியத் திறன்மட்டும் பயன் படாது. வாசகர் கண்களை ஈர்க் கும் திறனும் தேவையாகிறது.

மொத்தத்தில், தலைப்புப் பக் கம் அமைக்கும் ஓவியர் சிக்கலான மனநிலையற்றவராக இருக்க வேண்டும். எளிய தெளிவான சிந்தனைகள்தாம் அற்புத சாதனை களைச் செய்யும். கலையில் சிக்கனம் அவசியம் கையாளப்படும். கோடு களும் இடைவெளிகளும் குறைந் திருப்பது கவர்ச்சிக்கு உதவும். புத்தகத் தலைப்பு அமைப்புகளில் இன்றையப் போக்குகளைப்புரிந்து கொள்வதில் வாசகருக்கும் பொறுப்பு உண்டு. வாசகரும் மனமுவந்து ஒத்துழைத்தா லொழிய புதியவடிவங்கள், புதிய பாணிகள் வளர வாய்ப்புகள் இல் லாமல்போய்விடும். புதிய பாணி கள் வாசகர் புரிந்து கொள்ளும் சக்தி வளர்ச்சிக் கேற்ப தாம இத்து ஒவ்வொரு கட்டமாக முன் னேற முடியாது. புதுமை என் பது திடீரென்று தோன்றுவதா கும். நம்மைச் சுற்றியுள்ள இயற் கைக் காட்சிகளையும், வாழ்க்கை சாயைகளையும் கூர்ந்து கவனித் தால் புதுமையென்பது கஷ்டப்பட் டுத் தோற்றுவிக்கப்படுவதல்ல என்பது விளங்கும்.

நம்முன் உள்ள நான்கு நூல் களின் தலைப்புப் பக்க அமைப்பு களை ஆராய்வோம்.

சாயாவனம்:

இந்தத் தலைப்பு வெறும் எழுத் துக்களாலானது. ஒரு மனிதனின் கடும் உழைப்பும் விடா முயற்சி யும் புத்தகத்தின் பொருளாக இருக்கிறது. எத்தனையோ வடி வங்கள் இந்தப்பொருளை உணர்த் தும் வகையில் நம் கண்முன் தோன்றுகின்றன. அவைகளில் ஒன்றை தலைப்புக்கு உதவியாகப் பயன் படுத்தி இன்னும் கவர்ச்சி கரமான வடிவம் அமைக்கலாம். ஆனால் கற்பனையில் காணும் சில தோற்றங்களின் உணர்ச்சியை வெறும் வடிவங்களில் வெளியிடு வது எளிதல்ல. இந்த சந்தர்ப்பங் களில் வெறும் எழுத்துக்களைப் பயன் படுத்துவதே சிறந்த முறை யாகும்.

பூனைக்கண்:

இந்த நாவலின் தலைப்பு வடி வம் கதையின் உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது. ஆனால் கலை அடிப்படையில் வடிவம் திருப்தி அளிப்பதாயில்லை. பூனை யின் கண்கள் அசைவற்றுத் தோன்றுகின்றன. கண்களில் அசைவு இருந்தால்தான் பார்ப் பவரைக் கவர முடியும்.

தங்களுடைய சிந்தனைகள், உணர்ச்சிகள் பாதிக்கப்படாத

வரை மக்கள் எதையும் பார்த்த வுடன் ஒப்புக்கொள்வார்கள். பார்ப்பவர்கள் உணர்ச்சிகள் பாதிக்கப்பட்டால்தான் வடிவ மைப்பு பயன் தரும்.

மண்ணில் தெரியுது வானம்

இந்த நாவலின் தலைப்பு வடிவம் இதற்கு ஒரு சான்றாகும். மண், வானம் இரண்டையும் சித் திரிக்கும் அமைப்பு நாவலின் கதைப் பொருளும் 'போக்கும்' பார்ப்பவர்களின் சிந்தனைகளை ஒரு நிலையிலிருந்து வேறொரு நிலைக்குக் கொண்டு செல்கிறது. இந்த நிலைகளில் ஒன்றை மட்டும் சித்தரித்திருந்தால் போதும் என்று தோன்றுகிறது. தலைப்பின் எழுத்துக்களைத் தேர்ந்தெடுப்ப தில் ஒரு கட்டாயம் இருக்கக் கூடாது. வடிவமைப்பு கதை யின் உணர்ச்சியை வெளியிடும் வகையில் அமைந்து விட்டால் எழுத்துக்களின் தன்மையைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய தில்லை.

ஆத்மாவின் ராகங்கள்

முந்திய நூலைப் போலவே இந்தநாவலும் காந்தீயத்தையும் சுதந்திரப் போராட்டத்தையும் கதைப் பொருளாகக் கொண் டிருக்கிறது. சுதந்திரப் போராட் டத்தின் சம்பவங்களை சித்தரித்து தலைப்புக்குப் பொருள் கொடுத் திருக்கலாம். வெறும் எழுத்துக் களால் அமைக்கப்பட்ட வடிவம் நாவலின் தன்மையை எடுத்துக் கூறவில்லை. எந்த நூலுக்கும் எழுத்துக்களை மட்டும் உபயோ கித்து விடலாம்.

*

"காந்தி மலரஞ்சலி"

சென்னை ராஜேஸ்வரி கல் யாண மண்டபத்தில் 17-2-70 மாலை 6 மணிக்கு வானதி பதிப்பகத்தினரால் தயாரிக்கப்பட்ட ''காந்தி மலரஞ்சலி'' வெளியீட்டு விழா நடைபெற்றது.

தமிழக முதல்வர் வரமுடி யாததால் விழாவுக்கு ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்தார். திருமதி தயாளு கருணாநிதி முதல மைச்சரின் செய்தியைப் படித்துவிட்டு, காந்திஜி யுடன் ஆரம்ப காலத்தி லிருந்து பழகிய தமிழர் ஹரி ஹர சர்மாவிடம்கொடுத்து மலரை வெளியிட்டு வைத் தார்.

விழாவுக்கு முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் தலைமை வகித்தார். அறி ஞர்கள் கி.வா.ஜ., எஸ். டி. சுந்தரம், ம.பொ.சி. ஆகி யோர் சொற்பொழிவாற்றி னர். காந்தி வட்டம் ராம மூர்த்தி வானதி திருநாவுக் கரசு அவர்களுக்கு மாலை அணிவித்துகௌரவித்தார்.

நூறுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்களின் எழுத் தோவியத்தை உள்ளடக்கி, மிக அழகிய முறையில் காந்தி மலரஞ்சலி வெளி வந்திருக்கிறது. விலை ரூபாய் பத்து.

நூலகம்

மாத இதழின் விவர அறிக்கை

நமுனா IV

(8 வது சட்டப் பிரிவுப்படி)

1.	வெளியிடும் இடம் :	சென்னை-17
2.	வெளிவரும் காலம் :	மாதம் ஒரு முறை
3.	அச்சிடுவோர் பெயர் :	கொண்டா. காசி. சீதாராமன்
	இனம் :	இந்தியர்
	முகவரி :	ஸ்ரீ அகஸ்தியா பிரிண்டர்ஸ் 85, III மெயின்ரோடு, சி. ஐ. டி. நகர் (Ext), சென்னை-35
4.	வெளியிடுபவர் பெயர்:	K. கிருஷ்ணமூர்த்தி BIBLIOPOLE
	இனம் :	இந்தியர்
	முகவரி :	14, தணிகாசலம் செட்டித் தெரு, சென்னை-17
5.	ஆசிரியர் பெயர் :	குயிலன் (ஜி. ராமலிங்கம்)
	இனம் :	இந்தியர்
	முகவரி :	82, பாண்டிபஜார், சென்னை-17
6.	இந்தப் பத்திரிகையின் மொத்த மூலதனத்தில் ஒரு சதவிகிதத்திற்கு மேற்பட்ட பங்குதாரர்களின் பெயர்களும் முகவரிகளும்.	K. கிருஷ்ணமூர்த்தி, 14, தணிகாசலம் செட்டித் தெரு, சென்னை-17.

மேலே கண்டுள்ள விவரங்கள் அனைத்தும், அடியிற் கையொப்பமிட்டுள்ள எனது நம்பிக்கைக்கும், அறிவிற்கும் எட்டிய வரையில் உண்மை என்று உறுதி கூறுகிறேன்.

தேதி : 20-2-70

(ஒப்பம்) K. கிருஷ்ணமூர்த்தி
(வெளியிடுபவர்)

நூலகர் அறிமுகம்

1. பெயர்:—

S. சேஷாத்திரி

2. பிறந்த இடம்:
P. புதுப்பட்டி திருமயம் தாலுகா; திருச்சி ஜில்லா
தேதி: 29-11-1945

3. படிப்பு:—
பள்ளி இறுதி வகுப்பு (1964) மு. நா. செ. உயர் நிலைப் பள்ளி, கொப்பனுபட்டி திருச்சி ஜில்லா.

4. அனுபவம்:—
3 ஆண்டு 9 மாதங்கள் பணி யாற்றிய நூலகங்கள்—: இலுப்பூர்; அன்னவாசல் தற்சமயம் பணியாற்றும் நூலகம்–: கிளை நூலகம்; அன்னவாசல்.

பெயர்: பா. வடமலைராசன்

பிறந்த இடம்: கம்பம். (மதுரை மாவட்டம்) 1-7-1932

நூலகர் பணி: மதுரை மாவட்ட நூலக ஆணைக் குழுவின் திண்டுக்கல் கிளை நூலகத்தில் 22-10-1955 மூன்றும் பிரிவு நூலகராகப் பொறுப்பேற்றல்

சென்னைப் பல்கலைக் கழகத்தில் நூலகக்கலைச் சான்றிதழ்ப் பயற்சி முடித்தபின் 3-2-1962ல் பழநிக் கிளை நூலகத்தில் இரண்டாம் பிரிவு நூலகராகப் பதவி உயர்வு பெற்று பணி யாற்றுதல் பின்னர் வத்தலக்குண்டு, நிலக் கோட்டை கிளை நூலகங்கள்.

செய்திகள்

சென்னை

சென்னை நகர நூலக ஆணைக் குழு ஊழியர் சங்கத்தின் முதலாவது பொதுக்குழுக் கூட்டம் 19-1-70ல் சென்னை மாவட்ட மத்திய நூலகக் கட்டிடத்தில்கூடி கீழ்க்கண்ட நிர்வாகிகளை ஏகமனதாகத்தேர்ந்தெடுத்தது. செ மா. சதாசிவம் தலைவர்; ரா. கிருட்டினராசு துணைத்தலைவர்; ம. அரங்கநாதன் செயலாளர்; கோ. சுப்பிரமணியம் பொருளாளர்; ரா. கா. கோமதி நாயகம், கா. பாழினி, ஜே. இ. ஜார்ஜ், க. வாசுதேவன், கு. இராமதாசு, சி. நடேசன், செ. பாலசுந்தரம் ஆகியோர் நிர்வாகக் குழு அங்கத்தினர்கள்.

படாளம் (செங்கை)

படாளம் கிளை நூலகத்தில் 26-1-70ல் குடியரசுதின விழா ஊராட்சி மன்றத் தலைவர் பி. வி. வீராசாமிமுதலியார் தலைமையில் கொண்டாடப்பட்டது. ஆசிரியர் சந்திர சேகரன் கொடி ஏற்றி வைத்தார். துணை நூலகர் வி. கந்தசாமி அனைவருக்கும் இனிப்பு வழங்கி, நன்றி நவின்றார்.

நரசிங்கபுரம் (செங்கை)

நரசிங்கபுரம் கிளை நூலகத்தில் 3-2-70ல் அண்ணா மறைவுநாள் ஊராட்சி மன்றத் தலைவர் எஸ். நடராசன் தலைமையில் கொண்டாடப்பட்டது. 250 ஏழைகளுக்கு உணவு வழங்கி, மறைந்த முதல்வருக்கு அஞ்சலி செலுத்தப் பட்டது. துணை நூலகர் பி. குப்பன் நன்றி நவின்றார்.

கார்த்திகேயபுரம் (செங்கை)

7-2-70ல் சரஸ்வதி நூற்பாலையில் திருக்குறள் வகுப்பு நடைபெற்றது. அப்போது ''வள்ளுவர் வகுத்த வாழ்வியல்'', ''காந்தி மொழிக்குறள்'' என்ற இரு நூல்களை சரஸ்வதி நூற்பாலையின் சார்பில் கிளை நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. கிளை நூலகர் சு. தருமன் அவற்றை ஏற்றுக் கொண்டார்.

திருச்சி

திருச்சி மாவட்ட நூலகஆணைக் குழு பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன சேமிப்பு, கடனளிப்பு நாணயச் சங்கத்தின் 6-வது மகாசபைக்கூட்டம் திருச்சி மத்திய நூலகத்தில் 5-2-70ல் நடைபெற்றது. காலஞ்சென்ற சங்க உறுப்பினர் ஆ. ராமசாமியின் மனைவி திருமதி சரஸ்வதி அம்மாளுக்குநன்கொடையாக ரூ 293 தலைவரால் வழங்கப்பட்டது. நூலகக் காவலர், ஏவலர்களின் குழந்தைகளுக்குப் புத்தகங்கள் வாங்கிக் கொடுக்க ரூ. 197 ஒதுக்கப்பட்டது. தலைவர் எம். வெங்கட்ராமனுக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

தல்லாகுளம் (மதுரை)

தல்லாகுளம் கிளை நூலக வாசகர் வட்டத்தின் சார்பில் 17-1-70ல் சேதுராஜ நாயுடு தலைமையில் பொங்கல் விழா கொண்டாடப் பட்டது. மாதர்

டாஸ் செய்தி நிறுவனம் சோவியத் யூனியனில் பல பெரிய சிறிய நகரங்களில் கிளைகளையும், நிருபர்களையும் கொண்டுள்ளது. அதுபோல 94 நாடுகளில் கிளைகளும், நிருபர்களும் உண்டு. உலகின் மிகப் பெரிய செய்தி நிறுவனங்கள், அயல் நாட்டு தேசிய நிறுவனங்கள் என 48 நிறுவனங்களுடன் ''டாஸ்'' தகவல் மரிமாற்றம் செய்து கொள்கிறது.

— சோவியத் செய்தி

நல இலாகா பத்மாவதி அம்மாள் பொங்கல் வழங்கினார். பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர்.

மதுரை

மதுரை மாவட்ட நூலக ஆணைக் குழுவின் தலைவராகத் தொடர்ந்து 17 ஆண்டுகள் பணியாற்றிய வ. அழகப்பன் அவர்களுக்கும், ஆணைக்குழுவின் தலைவராக தற்போதுதேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் மதுரை நகரவைத் தலைவர் எஸ். முத்துஅவர்களுக்கும் நூலக ஆணைக்குழு ஊழியர்களின் சார்பில் 6-2-70ல் பாராட்டு விழா நடைபெற்றது. மாவட்ட முன்னாள் நீதிபதி பி. ரெங்கசாமி நாயுடு தலைமை தாங்கினார். ஆணைக்குழு உறுப்பினர்கள் தலைவர்களைப் பாராட்டிப் பேசினார்கள்.

இருதலைவர்களும் பாராட்டுக்கு மறுமொழி கூறினார்கள். எஸ். நடராசன் நன்றி கூறினார்.

வத்தலக்குண்டு (மதுரை)

வத்தலக்குண்டு வாசகர் வட்டம் 31-1-70ல் ஆலோசிய சுந்தரம் தலைமையில் தொடங்கப் பட்டது. துணை நூலகர் வை. ஞானம் வாசகர் வட்ட நோக்கம் பற்றி விளக்கினார். பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நாட்டரசன் கோட்டை

(இராமநாதபுரம்)

நாட்டரசன் கோட்டை கிளை நூலகத்தில் இலக்கிய மன்றம் துவக்கப்பட்டது. தலைவராக செ. நாராயணன் செட்டியார், துணைத்தலைவராக அரங்கசாமி, செயலாளராக சுப. கருப்பையா ஆகியோர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். துணை நூலகர் இர. இராமர் நன்றி கூறினார்.

ஏர்வாடி (நெல்லை)

ஏர்வாடி கிளை நூலகத்தின் 5-வது ஆண்டு விழா ஊராட்சி மன்றத்தலைவர் ஜனாப். சையது உசேன் இப்ராகிம் லெப்பை தலைமையில் நடைபெற்றது. துணை நூலகர் பா. இராமு வரவேற்பு வாசித்தார். பலர் சொற்பொழிவாற்றினர்.

நூல் வெளியீடு

7-12-69ல் ஆலந்தூரில் நடைபெற்ற கவிதை வட்டம் துவக்க விழாவில் கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்களின் இரண்டாவது கவிதைத் தொகுப்பான ''சித்திரப்பந்தல்'' என்ற நூலை புலவர் பொன்னிவளவன் அவர்கள் வெளியிட்டுப் பாராட்டினார்கள்.

★

INSTITUTE OF LIBRARY SCIENCE

CERTIFICATE IN LIBRARY SCIENCE

SESSION XI

The following is the provisional list of Register Numbers of candidates who have declared to have passed the Certificate in Library Science Examination held in December 1969, the last day of the examination being 24th December, 1969 by the Department of Public Libraries, Madras, subject to confirmation by the Fort St. George, Gazette.

2. The Certificates of those candidates who have passed the examination will be sent to the Secretaries of the Local Library Authorities concerned in due course from whom the candidates will get their certificates.

3. The unsuccessful candidates may contact the Librarian, Connemara Public Library, Madras-8 for the details regarding the next examination in due course.

SECOND DIVISION

Reg. No.	Name	Reg. No.	Name
1	ARJU (S)	12	KUMARASAMI (V)
2	DEVARAJALU (R)	13	MANI (N. S)
3	DHANAPALAN (P. K)	14	MANICKAM (A)
4	DORAISAMI (M)	21	SHANMUGASUNDARAM (N)
7	GURUSWAMI (V)	23	SOMASUNDARAM (S)
10	KANDASAMY (S)	26	THAYUMANAVAN (M)

THIRD DIVISION

6	GOVINDARAJAN (S. A)	19	RAMACHANDRAN (M)
8	HALILUR RAHIMAN (A)	24	SOUNDARARAJ (G)
9	KALYANI (T)	25	SUNDARARAJU (D)
11	KRISHNAMOORTHY (J. N)	28	VEERASEKARAN (V)
15	NATARAJAN (G)	29	VELAYUTHAM (K)
17	PANCHAKSHARAM (D)	32	NARAYANASAMI (C)
18	PARAMASIVAN (V S)		

V. THILLAINAYAGAM
LIBRARIAN,
Connemara Public Library,
Madras-8.

புத்தக விமரிசனம்

சோவியத் யூனியன் தகவல் களஞ்சியம்

'சோவியத் யூனியன் தகவல் களஞ்சியம்' என்ற இந்நூல் மாஸ்கோவில் நொவோஸ்தி செய்தி நிறுவனத்தாரால் வெளியிடப் பட்ட 'சோவியத் யூனியன்: கேள்வி–பதில்கள்' U.S.S.R. (Questions and Answers) என்ற நூலின் தமிழாக்கமே ஆகும்.

வினு-விடை அமைப்பில் அமைந்துள்ள இந்நூல், சோவியத் மக்களின் அக–புற வாழ்க்கை நிலேகளே வாசகர்களுக்கு சித்தரித்துக் காட்டுகிறது.

சோவியத் சமுதாய அமைப்பும் அரசு அமைப்பும் எவ்வாறுள்ளன? மக்களின் கடமைகள் யாவை? சோவியத் பொருளாதார அமைப்பின் பயனுக அந்நாட்டில் தொழில், விவசாயம், போக்குவரத்து, கல்வி, கலாசாரம், விஞ்ஞானம் தொழில் நுட்பம், விண்வெளி ஆராய்ச்சி ஆகியவை எவ்வாறுவெற்றிநடை போடுகின்றன என்பன போன்ற விவரங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இது சோவியத் யூனியனேப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள உதவும் மிகச் சிறந்த நூல். மக்கள் பதிப்பு. மலிவு விலே. தமிழர்கள் வாங்கிப் பயனடைவது அவசியம்.

'மாஜினி'யின் தமிழாக்கம் எளிமையாகவும், இனிமையாகவும், விறுவிறுப்பாகவும் உள்ளது. பாராட்டுகிறோம். பள்ளி, கல்லூரி, பொது நூலகங்களில் 'தகவல் நூல்' பகுதியில் கட்டாயம் இடம்பெற வேண்டிய தகவல் நூல்.

நூல்: சோவியத் யூனியன் தகவல் களஞ்சியம். தமிழில்: ''மாஜினி'' வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 6, நல்லதம்பி செட்டி தெரு, சென்னே-2. செப்டம்பர், 1969. பக்கம்: 590. விலே: ரூ. 3-00.

— நூலகர் பா. பெருமாள்

ஆயர்பாடி

ஆயர்பாடி சிறுகதைத் தொகுப்பில் 21 கதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் நல்ல மணியான கதைகள். அனேவரும் படித்து இன்புறத் தக்கவை. பொது, பள்ளி, கல்லூரி நூலகங்களில் அவசியம் வாங்கி வைக்க வேண்டிய நல்ல தரமான சிறுகதைத் தொகுப்பு இது. எனவே இதனே தமிழ் உறவின் 'பொன் மலர்' என்று கூறினுல் மிகையாகாது.

நூல்: ஆயர்பாடி, ஆசிரியர்: க. சோமசுந்தரம், வெளியீடு: தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட், X–147. 8, சின்னரெட்டித் தெரு, எழும்பூர், சென்னே-8 ஆகஸ்டு, 1968. பக்கம்: 186. விலே ரூ. 3-00 வகை சிறுகதை. O31, 3N11, A K8

— மெய்யூரான்

திருக்குறள் கனிகள்

தனிமனிதனுக்கும் சமுதாயத்துக்கும் அடிப்படையான வாழ்க்கை வகைகளேத் தொடுத்தும்வகுத்தும் சொல்வதனுல் இரு

வள்ளுவரின் திருக்குறள் காலம் கடந்து நிற்கிறது. அது தோன்றி ஏறத்தாழ இரண்டாயிரம்ஆண்டு கள் ஆயினும் இன்னும் புதுப் பொலிவு பெற்று மக்களுடைய வாழ்க்கையை உயர்த்துவதற்கு ஏற்ற கருத்துக்களுடன் இருக் கிறது. இந்நூல் இன்று உலகம் முழுவதும் பரந்து பல மொழி களில் வடிவம் பெற்று விளங்கு கிறது. நுட்பமான ஆராய்ச்சி யாளர்களின் அறிவுக்குவிருந்தாய் இன்றும் பயன்படுகிறது. சென்னைப் பல்கலைக்கழகத்தில், திருக்குறள் ஆராய்ச்சிக்கென்றே 'தனி ஆராய்ச்சி' (Department) துவக்கப்பட்டு, ஆராய்ச்சி நடந்து வருகிறது. திட்பமும் நுட்பமும் அமைந்த கருத்துக்களைச் சொல் வதனால் இந்நூல்என்றும் புலராத தன்மையை அடைந்திருக்கிறது. தன் திட்பத்தால் காலத்தை வென்றும், நுட்பத்தால் பல ருடைய ஆராய்ச்சிக்குட்பட்டும் விரிவான பொருளைத் தந்தும் விளங்குகிறது.

தமிழ்நாட்டு அறிஞர்கள் திருக் குறளை ஆராய்ந்து எழுதியுள்ள கட்டுரைகளின்தொகுப்பே 'திருக் குறள் கனிகள்'. தமிழன் ஒவ் வொருவனும் வாங்கிப்படிக்க வேண்டிய நல்ல நூல் இது. நூலகங்கள் இதை வாங்குவது அவசியமாகும் பயன்மிக்கது 'திருக்குறள் கனிகள்'.

நூல்: திருக்குறள் கனிகள், ஆசிரியர்: தமிழ் உறவுத் தொகுப்பு வெளியீடு: "தமிழ் உறவு" சென்னை-8. (தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்) மார்ச் 1968. பக்கம்: 400 விலை: ரு. 7-50. வகை: திருக் குறள் ஆராய்ச்சிக் கட்டுரைகள் தொகுப்பு நூல். O 31, 1 CS: GX W6 K8.

— அண்ணாமலையான்

சிவலிங்க வழிபாடு

தொன்றுதொட்டு சைவ நெறி யினர் வழிபட்டுவரும் சிவ லிங்க வழிபாடு எப்போது தோன் றியது? அதனை வழிபடும் தத்துவ மென்ன? அதன் வரலாறு யாது? சிவலிங்கத்தை "பாலடையா ளம்" என்று கூறும் கொள்கை பற்றி ஆசிரியரின் ஆராய்ச்சி என்ன சொல்லுகிறது? ஆவிடை யார் என்ற பெயர் எவ்வாறு வந்தது?

இந்தச் சந்தேகங்களைப் போக் கும வகையில் இந்நூலாசிரியர் திரு. சி. சத்தியமூர்த்தி சங்ககால இலக்கியங்களிலிருந்து, மேனாட்டு வரலாற்று ஆசிரியர்களின் கருத் துக்களையும் ஆய்ந்து, தெளிந்து, விஞ்ஞானக் கண்ணோட்டத் துடன் எழுதியிருப்பது பாராட் டுக் குரியது மட்டுமல்ல, தமிழ் மக்கள்—அதிலும் சைவ நெறி யினர் நன்றி தெரிவிப்பதற்கும் கடமைப்பட்டுள்ளனர்.

தொல்காப்பியத்தில் கூறப் படும் கந்தழியையும், சங்க இலக் கியங்களில் கூறப்படும் கந்துடை நிலையையும் ஆரம்பக் குறிப்பு களாகக் கொண்டு, மொகஞ் சதாரோ, அரப்பா முதலிய இடங்களில் அகழ்ந்து எடுக்கப் பட்டதும், ஐயாயிரம் ஆண்டு களுக்கு முந்தியது என்று கருதப் படுவதுமான சிவலிங்கச் சின்னங் களின் ஆய்வுகளை ஒப்பு நோக்கி ஆசிரியர் செய்திருக்கும் ஆராய்ச்சி நம்மைப் பிரமிக்க வைக்கிறது.

மதங்களை வளர்க்க இடைக் காலத்தில் தோன்றிய புராணக் கதைகள், அவற்றுக்குப் பின்னால் தோன்றியவர்கள் தந்த தத்துவ விளக்கங்கள் ஆகியவற்றையும் எடுத்துக் காட்டி வரலாறு வேறு, தத்துவம் வேறு என்பதை எளிய

நடையில் எல்லாரும் புரிந்து கொள்ளும் வகையில் சிறப்புடன் எழுதியுள்ளார் ஆசிரியர்.

ஆசிரியரின் ஆராய்ச்சிக் கண் ணோட்டத்திற்கும் எளிய நடைக்கும எடுத்துக் காட்டாக, ஒரு பகுதியை இங்கு குறிப்பிடுகிறேன்.

''மக்கத்திலுள்ள இசுலாமியரின் புனித கஃபா ஆலயத்தில் இருக்கும் கருங்கல், இலிங்கம் என்று கருதப்படுகிறது.... இக்கல்லை முத்தமிடுவது மக்கத்திற்கு யாத்திரை செய்பவர்கள் செய்யும் சடங்குகளுள் ஒன்ருகும். நபிகளுக்கு முன்பே அக்கல் கஃபாவில் பதிக்கப்பட்டிருந்தது. நபிகளின் 23-வது வயதில் பெரு வெள்ளம் ஏற்பட்டு கஃபாவின் சுவர்கள் இடிந்து வீழ்ந்தன. அந்தக் கருங்கல் எடுக்கப்பட்டு, மீண்டும் நபிகளால் சுவற்றில் பதிக்கப்பட்டது. நபிகள் நாயம்க பத்தாயிரம் பேர்களுடன் மக்கத்திற்குப் படையெடுத்துச் சென்று அங்கிருந்த 360 வழிபாட்டு உருவங்களையும் உடைத்தார். ஆனுல் அந்தக் கருங்கல்லை மட்டும் முத்தமிட்டார். இக் கருங்கல் பழைய அராபியரின் வழிபாட்டுத் திருவுருவமாகும். ஒரு காலத்தில் உலகெலாம் சிவலிங்க வணக்கம் பரவியிருந்தது. அப்போது வழிப்பட்ட சிவலிங்க வடிவந்தான் இக்கருங்கல் என்பதற்குச் சான்றுகள் உள.

நபிகள் நாயகம் வாழ்ந்த அதே காலத்தில் திருநாவுக்கரசரும் (கி.பி. 570-651) தமிழகத்தில் வாழ்ந்திருக்கிருர். அவர் தனது தேவாரத்தில் குறிப்பிடும் மக்கீச்சுரம் (6:71:8) மக்கத்தை குறிக்கிறது எனக் கருதுகின்றனர் மக்கத்திலுள்ள கருங்கல் விண் வீழ் கல் வகையைச் சேர்ந்ததாகும். கஃபாவை ஆபிரகாம் கட்டியெழுப்பும் போது வானுலகத் தூதுவர் கபிரியேலால் இக்கருங்கல் அவருக்கு அளிக்கப்பட்டது என்று வழங்கும் வரலாறும் இங்குநினைக்கத்தக்கது. வானுலகத்திலிருந்து இறங்கி வந்துமக்காவின்பாலைவனத்தில் அமர்ந்த அச்சிவலிங்கத்தையே மணிவாசகர்

''அந்தரத்து இழிந்து வந்து
அழகமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு
துதைந்திருந்து அருளியும்..''

கீர்த்தித் திருவகவல் 98-99 என்ற அடிகளால் சுட்டுகிருர் என்று அறிஞர்கள்கருதுகிருர்கள்.

வரலாற்று ஆராய்ச்சி செய்யும் இலக்கியம் பயின்ற இளைஞர்களுக்கு இந்நூல் ஒரு காணிக்கையாகும். தமிழன்னைக்கு இது ஒரு ஆரமாகும். புற்றீசல் போல் வெளிவரும் எண்ணற்ற நூல்களில் மதித்துப் பாராட்டத் தக்க நூலாகும் இது.

ஒவ்வொரு பொது நூலகத்திலும், கல்லூரி, பள்ளி நூலகங்களிலும் அவசியம் வாங்கி வைக்கப்பட வேண்டிய சிறந்த நூல் இது.

ஆசிரியர்: சி. சத்தியமூர்த்தி M.A.,B.O.L. விற்பனை முகவரி: ஜயகுமாரி ஸ்டோர்ஸ், கோர்ட் ரோடு, நாகர்கோயில்-1 1969. பக்கம் 118. விலை ரூ. 2-00.

— க. நாராயணன்

புதிய புத்தகங்கள்

737 சோவியத் யூனியன் தகவல் களஞ்சியம் U5.58N 31K9

தமிழில்: ''மாஜினி''. வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 6, நல்ல தம்பி செட்டித் தெரு, சென்னை-2. செப்டம்பர், 1969, பக்கம்: 590. விலை: ரூ 3-00 வகை: சோவியத் யூனியன்.

738 Studies in Tamil Folk Literature Y72:351.4411 111K9

ஆசிரியர்: N. வானமாமலை M. A. L. T.
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 6. நல்லதம்பி செட்டித் தெரு, சென்னை-2. ஜுன், 1969, பக்கம்: 152. விலை: ரூ 5-00 வகை: தமிழ் இலக்கியம் —திறனாய்வு; நாடோடிப் பாடல்களைப் பற்றி—ஆங்கிலத்தில்.

739 கனவுப் பூக்கள் O31, 1NMO,K K9

ஆசிரியர்: ஆலந்தூர் கோ. மோகனரங்கன். வெளியீடு: வசந்தா பதிப்பகம், 605, முத்துக்குமாரசாமி சாலை, ஆலந்தூர், சென்னை-16. டிசம்பர், 1969. பக்கம்: 96. விலை: ரூ 2-00 வகை: கவிதை

740 ஒரு நூறு உவமைக் குறள் O31,1 LO

ஆசிரியர்: புலவர் பசும்பொற்கிழார். வெளியீடு: பாலசுப்பிரமணிய பிரதம வித்யாசாலை சித்த நெறிக் கழகம், பாலையம் பட்டி (அஞ்சல்) அறுப்புக் கோட்டை (வழி) இராம நாதபுரம் மாவட்டம், 1970. பக்கம்: 34. விலை: 75 காசுகள். வகை: கவிதை

741 அமைதிக் கடல் அண்ணா V4411,21 y7NO9 31w1K9

ஆசிரியர்: வெற்றியழகன்
வெளியீடு: அன்புப்பதிப்பகம் 2/23, சூரப்ப முதலித் தெரு திருவல்லிக்கேணி, சென்னை-5. நவம்பர், 1969. பக்கம்: 16 விலை: 80 காசுகள் வகை: அண்ணா பற்றி கவிதை.

Edited by: KUYILAN (G. Ramalingam)
and Printed by Kondah. Kasi. Seetharamon at Sree Agastya Printers
85, III Main Road, C.I. T.Nagar (Ext.) Madras-35
For the Publishers " Bibiiopole "
14, Thanikachalam chetty Road; Madras-17.